750

பகுதி-1

தேசிய கீதங்கள்

THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY * TANJORE *

687

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

பகுதி—1

தேசீய கீதங்கள்

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே.”

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

(காபிரைட் ரிஜிஸ்டர் செய்தது)

16-வது பதிப்பு] 1948 [விலை அணா 12

முதல் பதினைந்து பதிப்புகள்	....	36500
பதினாறும் பதிப்பு	....	3000

ஹிந்துஸ்தானி பிரசார் பிரஸ், தியாகராயநகர், சென்னை.

முன்னுரை

தமிழ் மொழிக்குப் புதிய சுவையும் தமிழுலகத்துக்குப் புதிய உணவும் தமிழ் மக்கட்குப் புதிய உயிருந் தந்து, 'கேட்போர் கன்னங்கள் அமுதூறுந்' தம தின்னிசைத் தீம்பாடல்களைத் தமிழ் நாடு முழுதும் முழங்கச் செய்த புலவர் கோமான் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்களுக்கு முன்னுரை அவசியமே யில்லை.

தற்சமயம் தமிழகம் மட்டுமன்றி இந்தியா முழுதும் பாரதியாரின் புகழைப் பரவச் செய்யும் பாடல்கள் இவையே. பாரதியாருக்குத் தேச பக்தி உயிர் நிலையாகவே யிருந்தது என்பதற்கு இணையற்ற பண் இசை முதலிய லக்ஷணங்கள் பொருந்திய இப் பாக்களே சான்றாகும். இவைகளைப் பற்றிக் கூறுமிடத்து, காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் "உள்ளங்கொள்ளை கொள்ளும் பாட்டின் மூலமாகத் தான் தேச பக்தியை உள்ளபடி உணர்த்த முடியும்" என்றும் "அதிவேகமாகப் பறக்கும் திறத்தாலும் இறகுகளின் வர்ண வனப்பினாலும் உள்ளமுருக்கும் பாட்டின் இனிமையாலும் செருக்குற்ற ஒரு பறவைக்கு இவர் பாட்டைஒப்பிடலாம்" என்றும் எழுதுகிறார். ஆனால் கடற்கரையில், சாந்திமயமான சாயங்கால வேளையில், உலகனைத்தையும் மோக வயப்படுத்தி, நீலக் கடலையும் பாற் கடலாக்கும் நில வொளியில், புதிதாகப் புனைந்த கீர்த்தனங்களைக்

கற்பனு கர்வத்தோடும் சிருஷ்டி உற்சாகத்தோடும் ஆசிரியன் தன்னுடைய கம்பீரமான குரலில் பாடினதைக் கேட்டவர்கள் தான் இவைகளின் சாரத்தை நன்கு அனுபவித்த பாக்கியத்தைப் பெற்றவராவர்.

நமது நாட்டைப் புகழ்ந்து பாடியிருக்கும் புலவர்களையும் தேசபக்தர்களையும் கணக்கிட முடியாது; என்றாலும்,

மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெருநாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே

என்றும்,

நீல முடிதரித்த பல மலை சேர் நாடு
நீரமுத மெனப் பாய்ந்து நிரம்பு நாடு
கோலமுறு பயன் மரங்கள் செழிந்து வாழுங்
குளிர் காவுஞ் சோலைகளுங் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன் செய்யும் புன் செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையு நறுநெய்யுந் தேனுமுண்டு
பண்ணவர் போல் மக்களெலாம் பயிலு நாடு

என்றுங் கூறிய மொழிகளுக்கு இணை சொல்ல முடியுமெனத் தோன்றவில்லை.

தேச பக்தி யென்னும் உணர்வைக் குழந்தைப் பருவம் முதற் கொண்டே நம் நாட்டார் ஏற்றுக்கொள்ள வேண்டு மெனத் தமது 'பாப்பாப் பாட்'டில்

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
அமிழ்தி லினியதடி பாப்பா—எங்கள்
ஆன்ருேர்கள் தேசமடி பாப்பா

என்று பாடிய கவிக்கு நாம் செய்யக் கூடிய கைம்மாறு யாதெனில், அவரது பாடல்களை வேதமாகக் கருதித் தமிழ் நாட்டில் வீடுதோறும் வம்ச பரம்பரையாகப் பாடி வருவதுடன் அவர் காட்டியுள்ள லக்ஷ்யங்களைப் பின்பற்றுவதே யாம். பாரதியாரின் பாடல்கள் என்றும் தமிழ் மக்கள் மனத்திற் குடி கொண்டு வாழ்க. வந்தே மாதரம்.

பாரதி பிரசுராலயத்தார்.

அட்டவணை

பக்கம்

முன்னுரை iii
பாடல்கள் ....1—112
1. வந்தே மாதரம் 1
2. வந்தே மாதரம் 3
3. நாட்டு வணக்கம் 4
4. ஜாதீய கீதம் (மொழி பெயர்ப்பு) 5
5. ஜாதிய கீதம் (புதியமொழி பெயர்ப்பு.) 7
6. பாரத நாடு ... 8
7. பாரத தேசம் 10
8. எங்கள் நாடு 12
9. ஜய பாரத 14
10. பாரத மாதா 16
11. திருப்பள்ளி யெழுச்சி 18
12. பாரத தேவியின் திருத் தசாங்கம் 20
13. பாரத மாதா நவரத்தினமாலை 23
14. மாதாவின் துவஜம் 28
15. எங்கள் தாய் ... 30
16. வெறிகொண்ட தாய் 32
17. நடிப்புச் சுதேசிகள் 33
18. கோக்கலே சாமியார் பாடல் 37
19. தொண்டு செய்யும் அடிமை 38
20. மேத்தா திலகருக்குச் சொல்வது 40

பக்கம்

21. நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல் 41
22. ஆங்கிலேயன் ஒரு தேச பக்தனுக்குக் கூறுவது 43
23. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி 44
24. பாரத தேவியின் அடிமை 46
25. லாஜ்பத்ராய் துதி 47
26. லாஜ்பத்ராய் பிரலாபம் 48
27. தாதாபாய் நவுரோஜி 50
28. பூபேந்திர விஜயம் 52
29. வாழ்க திலகன் நாமம் 54
30. லோகமான்ய பால கங்காதர திலகர் 55
31. மஹாத்மா காந்தி பஞ்சகம் 56
32. அபேதானந்த ஸ்வாமிகள் மீது ஸ்தோத்திரக் கவிகள் 58
33. சுதந்திரப் பெருமை 60
34. சுதந்திர தாகம் 62
35. சுதந்திர தேவியின் துதி 64
36. சுதந்திரப் பள்ளு 67
37. கிருஷ்ணன் மீது ஸ்துதி 69
38. ஸ்ரீ கிருஷ்ணன் மீது ஸ்தோத்திரம் 70
39. விடுதலை 71
40. பாரத ஸமுதாயம் 72
41. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை. 74

பக்கம்

42. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும்
வருகின்ற ஹிந்துஸ்தானமும் 77
43. பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள் 80
44. மாஜினியின் பிரதிக்கினை 82
45. பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து 87
46. புதிய ருஷியா 90
47. பெண்கள் விடுதலைக் கும்மி 92
48. புதுமைப் பெண் 94
49. பெண்மை 97
50. ஆங்கிலப் பயிற்சி 99
51. நாட்டுக் கல்வி 102
52. தொழில் 103
53. தமிழ்த் தாய் 104
54. தமிழ் 107
55. செந்தமிழ் நாடு 108
56. தமிழ் மொழி வாழ்த்து 111
57. புது வருஷம் 112

அனுபந்தம் 1.
ஜாதீய கீதம் 113

அனுபந்தம் 2.
பாடல் முதற்குறிப்பகராதி 115

அனுபந்தம் 3.
குறிப்புரை ... 118

ஓம் சக்தி

பாரத மாதா

ஒன்று பரம்பொருள்; நாமதன் மக்கள்
உலகின்பக் கேணி' யென்றே—மிக
நன்று பல் வேதம் வரைந்த கை பாரத
நாயகி தன் திருக் கை.

—பக்கம் 16.

ஓம் சக்தி

தேசீய கீதங்கள்

1. வந்தே மாதரம்

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு

ராகம்—நாதநாமக்கிரியை] [தாளம்—ஆதி

பல்லவி

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

சரணங்கள்

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே.
(வந்தே)

2. ஈனப் பறையர்களேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப்பாரோ?
(வந்தே)

3. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ?
(வந்தே)

4. ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?
(வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொதுவாகும்;
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

6. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.
(வந்தே)

2. வந்தே மாதரம்

ராகம்—ஹிந்துஸ்தானி பியாக். தாளம்—ஆதி.

பல்லவி

வந்தே—மாதரம்—ஜய
வந்தே மாதரம்

சரணங்கள்

1. ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய பாரத
ஜய ஜய ஜய ஜய (வந்தே)

2. ஆரிய பூமியில்
நாரிய ரும் நர
சூரிய ரும் சொலும்
வீரிய வாசகம். (வந்தே)

3. நொந்தே போயினும்
வெந்தே மாயினும்
நந்தே சத்தர்—உ
வந்தே சொல்வது (வந்தே)

4. ஒன்றாய் நின்றினி
வென்றா யினுமுயிர்
சென்றாயினும் வலி
குன்றா தோதுவம். (வந்தே)

3. நாட்டு வணக்கம்

சுதேச வணக்கம்

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி

1. எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர மெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
(பல்லவி)'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ!

2. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள் கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடி, இல்
போந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) 'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

3. மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
(பல்லவி) 'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கேனோ?

---

4. ஜாதீய கீதம்

பங்கிம் சந்திர சட்டோபாத்தியாயர் எழுதிய
ஜகத் பிரசித்தி கொண்ட
"வந்தே மாதரம்" *கீதத்தின்
மொழி பெயர்ப்பு

1. இனிய நீர்ப் பெருக்கினை! இன்கனிவளத்தினை!
தனி நறு மலயத் தண்காற் சிறப்பினை!
பைந்நிறப் பழனம் பரவிய வடிவினை! (வந்தே)

2. வெண்ணிலாக் கதிர் மகிழ் விரித்திடு மிரவினை!
மலர் மணிப் பூத்திகழ் மரன் பல செறிந்தனை!
குறுநகை யின்சொலார் குலவிய மாண்பினை!
நல்குவை யின்பம், வரம்பல நல்குவை! (வந்தே)

---

* அநுபந்தம் 1-ல் காண்க.

3. *முப்பது கோடிவாய் (நின்னிசை) முழங்கவும்
அறுபது கோடி தோ ளுயர்ந் துனக் காற்றவும்
திறனிலாள் என்றுனை யாவனே செப்புவன்?
அருந்திற லுடையாய்! அருளினை போற்றி!
பொருந்தலர் படைபுறத் தொழிந்திடும் பொற்
[பினை! (வந்தே)

4. நீயே வித்தை, நீயே தருமம்!
நீயே யிதயம், நீயே மருமம்!
உடலகத் திருக்கு முயிரு மன் னீயே! (வந்தே)

5. தடந்தோ ளகலாச் சக்தி நீ யம்மே!
சித்த நீங்காதுறு பக்தியு நீயே!
ஆலயந் தோறு மணி பெற விளங்கும்
தெய்விக வடிவமுந் தேவியிங் குனதே! (வந்தே)

6. ஒருபது படைகொளு முமையவ ணீயே!
கமல மெல் லிதழ்களிற் களித்திடும் கமலை நீ!
வித்தை நன் கருளும் வெண்மலர்த் தேவி நீ!
(வந்தே)

7. போற்றி வான் செல்வீ, புரையிலை, நிகரிலை;
இனிய நீர்ப் பெருக்கினை, இன் கனிவளத்தினை!
சாமள நிறத்தினை, சரளமாந் தகையினை!
இனியபுன் முறுவலாய்! இலங்குநல் லணியினை!
தரித்தெமைக் காப்பாய், தாயே! போற்றி!
(வந்தே)

---

* வங்காளி பாஷையிலே ஏழுகோடியென்றே கூறியிருக்கின்றது, ஆனால் அது வங்காளத்தை மட்டிலுமே குறிப்பிட்டது. 30 கோடி இந்தியா முழுமையின் ஜனத்தொகை.

5. ஜாதீய கீதம்

புதிய மொழிபெயர்ப்பு

1. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்,
குளிர் பூந்தென்றலும், கொழும் பொழிற் பசுமையும்
வாய்ந்து நன் கிலகுவை, வாழிய அன்னை ! [யும்
(வந்தே)

2. தெண்ணில வதனிற் சிலிர்த்திடு மிரவும்,
தண்ணியல் விரிமலர் தாங்கிய தருக்களும்
புன்னகை யொளியும், தேமொழிப் பொலிவும்
வாய்ந்தனை, இன்பமும் வரங்களு நல்குவை.
(வந்தே)

3. கோடி கோடி குரல்க ளொலிக்கவும்
கோடி கோடி புயத்துணை கொற்றமார்
நீடு பல்படை தாங்கி முன்னிற்கவும்,
'கூடு திண்மை குறைந்தனை' யென்பதென் ?
ஆற்றலின் மிகுந்தனை, அரும்பதங் கூட்டுவை,
மாற்றலர் கொணர்ந்த வன்படை யோட்டுவை
(வந்தே)

4. அறிவுநீ, தருமநீ, உள்ளநீ, அதனிடை
மருமநீ, உடற்கண் வாழ்ந்திடு முயிர்நீ;
தோளிடை வன்புநீ, நெஞ்சகத் தன்புநீ,
ஆலயந்தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலை யெலாம், தேவி, இங்குனதே.
(வந்தே)

---

* முன்னொரு முறை, முழுவதும் அகவலாக ஒரு மொழி பெயர்ப்பு எழுதி யிருந்தேன். ஆனால் அது பாடுவதற்கு நயப்படா தாகையால், இப்போது, பல சந்தங்கள் தழுவி மொழி பெயர்த்தெழுதப் பட்டிருக்கின்றது.

5. பத்துப் படைகொளும் பார்வதி தேவியும்
கமலத் திகழ்களிற் களித்திடும் கமலையும்
அறிவினை யருளும் வாணியும் அன்னை நீ!
(வந்தே)

6. திரு நிறைந்தனை, தன்னிக ரொன்றிலை!
தீது தீர்ந்தனை, நீர்வளஞ் சார்ந்தனை,
மருவு செய்களின் நற்பயன் மல்குவை,
வளனின் வந்ததோர் பைந்நிறம் வாய்ந்தனை,
பெருகு மின்ப முடையை, குறுநகை
பெற் றொளிர்ந்தனை, பல்பணி பூண்டனை.
இரு நிலத்துவந் தெம்முயிர் தாங்குவை,
எங்கள் தாய், நின் பதங்க ளிறைஞ்சுவாம்!
(வந்தே)

6. பாரத நாடு

ராகம்—ஹிந்துஸ்தானி தோடி

பல்லவி

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே யுடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே—புய
வீக்கத்திலே யுயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையிலே யுளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

6. யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

7. ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

8. தோட்டத்திலே மரக்கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயிரூட்டத்திலே
தோட்டத்திலே யடங்காத நிதியின்
சிறப்பினிலே யுயர் நாடு—இந்தப் (பாரு)

7. பாரத தேசம்

ராகம்—புன்னாகவராளி

பல்லவி

பாரத தேசமென்று பெயர் சொல்லுவார்—மிடிப்
பயங் கொல்லுவார் துயர்ப்பகை வெல்லுவார்.

சரணங்கள்

1. வெள்ளிப் பனி மலையின் மீதுலவுவோம்;—அடி
மேலைக் கடல் முழுதுங் கப்பல் விடுவோம்,
பள்ளித் தல மனைத்துங் கோயில் செய்குவோம்; எங்கள்
பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்.

2. சிங்களத் தீவினுக்கோர் பால மமைப்போம்;
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்
வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்.

3. வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறு பல பொருளுங் குடைந் தெடுப்போம்;
எட்டுத் திசை களிலுஞ் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும்கொண்டுவருவோம்,

4. முத்துக் குளிப்ப தொரு தென்கடலிலே
மொய்த்து வணிகர் பல நட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே.

5. சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன் னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டி விளை யாடி வருவோம்.

6. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்;
சிங்க மராட்டியர் தங் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்.

7. காசி நகர்ப் புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற் கோர் கருவி செய்வோம்
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்க மளிப்போம்.

8. பட்டினி லாடையும் பஞ்சிலுடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக் கவை கொடுப்போம்.

9. ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள்
[வைப்போம்;
ஓயுதல் செய்யோம், தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம், பல வண்மைகள்
[செய்வோம்,

10. குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம், இரும்பாணிகள்
[செய்வோம்;
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்;
ஞாலம் நடுங்க வரும் கப்பல்கள் செய்வோம்.

11. மந்திரங் கற்போம், வினைத் தந்திரங் கற்போம்
வானை யளப்போம், கடல் மீனை யளப்போம்;
சந்திர மண்டலத் தியல் கண்டு தெளிவோம்;
சந்தித் தெருப் பெருக்கும் சாத்திரங் கற்போம்.

12. காவியஞ் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்;
கலை வளர்ப்போம், கொல்லருலை வளர்ப்போம்;
ஓவியம் செய்வோம்,நல்ல ஊசிகள் செய்வோம்;
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம்.

13. 'சாதி இரண் டொழிய வேறில்லை' யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல்அமிழ்தமென்போம்;
நீதி நெறியி னின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேல்வர்; கீழவர் மற்றோர். (பாரத)

---

8. எங்கள் நாடு

ராகம்—பூபாளம்

1. மன்னு மிமய மலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?

பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே.

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந் திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரா னருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே.

3. இன்னல் வந்துற்றிடும் போததற் கஞ்சோம்;
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்.
தன்னலம் பேணி யிழி தொழில் புரியோம்,
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்.
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே.

---

9. ஜய பாரத !

1. சிறந்து நின்ற சிந்தை யோடு
   தேய நூறு வென்றிவள்
மறந்த வீரர்ந் தந் நாடர் வந்து
   வாழி சொன்ன போழ்தினும்,
இறந்து மாண்பு தீர மிக்க
   ஏழ்மை கொண்ட போழ்தினும்,
அறந்த விர்க்கி லாது நிற்கும்
   அன்னை வெற்றி கொள்கவே!

2. நூறு கோடி நூல்கள் செய்து
   நூறு தேய வாணர்கள்
தேறு முண்மை கொள்ள விங்கு
   தேடி வந்த நாளினும்,
மாறு கொண்டு கல்வி தேய
   வண்மை தீர்ந்த நாளினும்,
ஈறு நிற்கு முண்மை யொன்
   றிறைஞ்சி நிற்பள் வாழ்கவே!

3. வில்லர் வாழ்வு குன்றி யோய
   வீர வாளு மாயவே
வெல்லு ஞானம் விஞ்சி யோர்செய்
   மெய்ம்மை நூல்கள் தேயவும்

சொல்லு மிவ் வனைத்தும் வேறு
குழு நன்மை யுந்தர
வல்ல* நூல் கெடாது காப்பள்
வாழி யன்னை வாழியே!

4. தேவ ருண்ணு நன்ம ருந்து
சேர்ந்த கும்ப மென்னவும்
மேவு வார் கடற்கணுள்ள
வெள்ள நீரை யொப்பவும்
பாவ நெஞ்சி னோர் நிதம்
பறித்தல் செய்வ ராயினும்
ஓவிலாத செல்வ மின்னும்
ஓங்கு மன்னை வாழ்கவே!

5. இதந் தரும் தொழில்கள் செய்
திரும்பு விக்கு நல்கினள்
பதந் தரற் குரிய வாய
பன்ம தங்கள் நாட்டினள்,
விதம் பெறும்ப ஞட்டினர்க்கு
வேறொ ருண்மை தோற்றவே
சுதந்திரத்தி லாசை யின்று
தோற்றி னுள்மன் வாழ்கவே!

---

*உபநிஷத்து அல்லது கீதை

10. பாரத மாதர்

தான தனந்தன தான தனந்தன
தானனத் தானானே.

1. முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவி நல்
ஆரிய ராணியின் வில்.

2. இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்த வில் யாருடை வில்?—எங்கள்
மந்திரத் தெய்வதம் பாரத ராணி
வயிரவி தன்னுடை வில்.

3. 'ஒன்று பரம் பொருள்: நா மதன் மக்கள்;
உலகின்பக் கேளி' யென்றே—மிக
நன்று பல் வேதம் வரைந்த கை பாரத
நாயகி தன் திருக் கை.

4. சித்த மயமிவ் வுலகம் உறுதி நம்
சித்தத்தில் ஓங்கிவிட்டால்—துன்பம்
அத்தனையும் வெல்ல லாமென்று சொன்ன சொல்
ஆரிய ராணியின் சொல்.

5. சகுந்தலை பெற்றதோர் பிள்ளை சிங்கத்தினைத்
தட்டி விளையாடி—நன்
றுகந்ததோர் பிள்ளை முன் பாரத ராணி
ஒளியுறப் பெற்ற பிள்ளை.

6. காண்டிவ மேந்தி உலகினை வென்றது
கல்லொத்த தோளெவர் தோள்?—எம்மை
ஆண்டருள் செய்பவள், பெற்று வளர்ப்பவள்
ஆரியர் தேவியின் தோள்.

7. சாகும் பொழுதில் இருசெவிக் குண்டலம்
தந்த தெவர் கொடைக் கை?—சுவைப்
பாகு மொழியிற் புலவர்கள் போற்றிடும்
பாரத ராணியின் கை.

8. போர்க்களத் தேபர ஞானமெய்க் கீதை
புகன்ற தெவருடை வாய்?—பகை
தீர்க்கத் திறந்தரு பேரினள் பாரத
தேவி மலர்த்திரு வாய்.

9. தந்தை யினிதுறத் தானரசாட்சியும்
தையலர் தம்முறவும்—இனி
இந்த உலகில் விரும்புகிலே னென்ற
தெம்மனை செய்த வுள்ளம்.

10. அன்பு சிவம் உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகுமென் றே—இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழி யெங்கள் அன்னை மொழி.

11. மிதிலை எரிந்திட வேதப் பொருளை
வினவும் சனகன் மதி—தன்
மதியினிற் கொண்டதை நின்று முடிப்பது
வல்ல நம் அன்னை மதி.

12. தெய்விகச் சாகுந் தலமெனும் நாடகம்
செய்த தெவர் கவிதை ?—அயன்
செய்வ தனைத்தின் குறிப்புணர் பாரத
தேவி யருட் கவிதை.

---

11. பாரத மாதா திருப்பள்ளி யெழுச்சி

1. பொழுது புலர்ந்தது ; யாம் செய்த தவத்தால்
புன்மை யிருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி ;
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர் பல்லாயிரர் சூழ்ந்துநிற்கின்றோம்
விழுதுயில் கின்றனை யின்னுமெந்தாயே !
வியப்பிது காண் ! பள்ளி யெழுந்தருளாயே.

2. புள்ளினம் ஆர்த்தன ; ஆர்த்தன முரசம் ;
பொங்கிய தெங்குஞ் சுதந்திர நாதம் ;
வெள்ளிய சங்கம் முழங்கின, கேளாய் !
வீதியெ லாமணு குற்றனர் மாதர் ;
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன்
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார் ;
அள்ளிய தெள்ளமு தன்னையெம் அன்னை !
ஆருயிரே ! பள்ளி யெழுந்தருளாயே.

3. பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்:
பார்மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்;
கருதிநின் சேவடி அணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்;
சுருதிகள் பயந்தனை; சாத்திரங் கோடி.
சொல்லரு மாண்பின ஈன்றனை யம்மே!
நிருதர்கள் நடுக்குறச் சூல்கரத் தேற்றாய்!
நிர்மலையே, பள்ளி யெழுந்தருளாயே!

4. நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ?
பொன்னனை யாய்! வெண் பனிமுடி யிமையப்
பொருப்பின னீந்த பெருந்தவப் பொருளே!
என்ன தவங்கள் செய் தெத்தனை காலம்
ஏங்குலம் நின்னருட் கேழையம் யாமே?
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ?
இன்னுயிரே! பள்ளி யெழுந்தருளாயே!

5. மதலைய ரெழுப்பவுந் தாய்துயில் வாயோ?
மாநிலம் பெற்றவ ளிஃதுண ராயோ?
குதலை மொழிக்கிரங் காதொரு தாயோ?
கோமகளே! பெரும் பாரதர்க் கரசே!
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்;
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய்!
ஈன் றவளே! பள்ளி யெழுந்தருளாயே!

12. பாரத தேவியின் திருத் தசாங்கம்

நேரிசை வெண்பா

நாமம்

(காம்போதி)

பச்சை மணிக்கிளியே! பாவியெனக் கேயோகப்
பிச்சை யருளிய தாய் பேருரையாய்—இச்சகத்திற்
பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டு வித்த (1)
பாரதமா தேவியெனப்பாடு.

நாடு

(வஸந்தம்)

தேனார் மொழிக்கிள்ளாய்! தேவியெனக் கானந்த
மானாள் பொன் னாட்டை யறிவிப்பாய்—வானாடு
பேரிமய வெற்புமுதற் பெண்குமரி யீறாகும்
ஆரிய நாடென்றே யறி (2)

நகர்

(மணிரங்கு)

இன்மழலைப் பைங்கிளியே யெங்க ளுயிரானாள்
நன்மையுற வாழு நகரெது கொல்?—சின் மயமே
நானென் றறிந்த நனி பெரியோர்க் கின்னமுது
தானென்ற காசித் தலம். (3)

ஆறு

(சுருட்டி)

வன்னக் கிளி! வந்தே மாதரமென் றோதுவரை
யின்னலறக் காப்பா ளியாறுரையாய்—நன்னர் செயத்
தான்போம்வழியெலாந் தன்மமொடுபொன்விளைக்கும்
வான் போந்த கங்கையென வாழ்த்து. (4)

மலை

(கானடா)

சோலைப் பசுங்கிளியே! தொன்மறைகள் நான்
வாலை வளரு மலைகூறாய்—ஞாலத்துள் [குடையாள்
வெற்பொன்று மீடிலதாய் விண்ணில் முடிதாக்கும்.
பொற்பொன்று வெள்ளைப் பொருப்பு. (5)

ஊர்தி

(தன்யாசி)

சீருஞ் சிறப்புமுயர் செல்வமுமோ ரெண்ணற்றாள்
ஊரும் புரவி யுரை தத்தாய்!—தேரிற்
பரிமிசை யூர் வாளல்லள் பாரனைத்து மஞ்சும்
அரிமிசையே யூர்வா ளவள். (6)

படை

(முகாரி)

கருணை யுருவானாள் காய்ந்தெழுங்காற் கிள்ளாய்!
செருநரை வீழ்த்தும் படையென் செப்பாய்—[பொரு
[பவர்மேற்
றண்ணளியான் வீழாது, வீழிற் றகைப்பரிதாந்
திண்ணமுறு வான் குலிசம் தேரு. (7)

முரசு

(செஞ்சுருட்டி)

ஆசை மரகதமே! அன்னை திரு முன்றிலிடை
ஓசை வளர்முரச மோதுவாய்—'பேசுகவோ
சத்தியமே செய்க தருமமே' யென்றொலிசெய்
முத்திதரும் வேத முரசு. (8)

தார்

(பிலகரி)

வாரா யிளஞ்சுகமே! வந்திப்பார்க் கென்றுமிடர்
தாராள் புனையுமணித் தார்கூறாய்—சேராரை
முற்றாக்குறுநகையான் முற்றுவித்துத் தானொளிர்வாள்
பொற்றா மரைத்தார் புனைந்து. (9)

கொடி

(கேதாரம்)

கொடிப்பவள வாய்க்கிள்ளாய்! சூத்திரமுந் தீங்கும்
மடிப்பவளின் வெல்கொடிதான் மன்றன்?—அடிப்-
நன்றாரத் தீயார் நலிவுறவே வீசுமொளி [பணிவார்
குன்றா வயிரக் கொடி. (10)

---

13. பாரத மாதா நவரத்தின மாலை

[இந்நூலில் ஒன்பது பாடலிலும் முறையே ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள் இயற்கைப் பொருளிலேனும் சிலேடைப் பொருளிலேனும் வழங்கப்பட்டிருத்தல் காண்க.]

காப்பு

வீரர் முப்பத்திரண்டு கோடி விளை வித்த
பாரத மாதாவின் பத மலர்க்கே—சீரார்
நவரத்ன மாலை யிங்கு நான் சூட்டக் காப்பாம்
**சிவரத்ன மைந்தன் திறம்.*

வெண்பா

1. *திறமிக்க நல்வயிரச் சீர்திகழு மேனி*
அறமிக்க சிந்தை, அறிவு, பிற—நலங்கள்
எண்ணற்றன பெறுவார் 'இந்தியா' என்ற நின்றன்
கண்ணொத்த பேருரைத்தக் கால்.

கட்டளைக் கலித்துறை

2. காலன் எதிர்ப்படிற் கை கூப்பிக்
கும்பிட்டுக் கம்பன முற்
றோல மிட்டோடி மறைந்தொழிவான்;
பகையொன் றுளதோ?

**சிவரத்னமைந்தன்—சிவமாகிய ரத்தினத்திற்குப் பிறந்த மைந்தன்; விநாயகன்.*

நீலக் கடலொத்த கோலத்தினுள் மூன்று
நேத்திரத் தாள்*
காலக் கடலுக்கோர் பால மிட்டாள்
அன்னை காற் படினே.

எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

3. அன்னையே, அந்நாளில் அவனிக் கெல்லாம்
ஆணி முத்துப் போன்ற மணிமொழிகளாலே
பன்னி நீ வேதங்கள், உப நிடதங்கள்,
பரவு புகழ்ப் புராணங்கள், இதிஹாஸங்கள்;
இன்னும் பன் னூல்களிலே யிசைத்த ஞானம்
என்னென்று புகழ்ந்துரைப்போம் அதனை [யிந்நாள்?
மின்னுகின்ற பேரொளி காண்! காலங் கொன்ற
விருந்து காண்! கடவுளுக் கோர் வெற்றி [காணே.

ஆசிரியப்பா

4. வெற்றி கூறுமின்! வெண் சங் கூதுமின்!
கற்றவ ராலே உலகு காப்புற்ற
துற்றதிங் கிந் நாள்! உலகினுக் கெல்லாம்
இற்றை நான் வரையினும், அறமிலா மறவர்
குற்றமே தமது மகுடமாக் கொண்டோர்,
மற்றை மனிதரை அடிமைப் படுத்தலே
முற்றிய அறிவின் முறையென் றெண்ணுவார்;

*மூன்று நேத்திரத்தாள்—இங்கு பாரத மாதாவை லோக மாதாவாகிய உமா தேவியாக பாவனை செய்யப் பட்டிருக்கின்றது.

பற்றை யரசர் பழிபடு படையுடன்
சொற்றை நீதி தொகுத்து வைத் திருந்தார.
இற்றை நாள் ;
பாரி லுள்ள பல நாட்டினர்க் கும்
பாரத நாடு புது நெறி பழக்க
லுற்றதிங் கிந்நாள்—உல கெலாம் புகழ
*இன்பவளஞ் செறி பண் பல பயிற்றுங்
கவீந்திர ஞகிய ரவீந்திர நாதன்
சொற்றது கேளீர் :—"புவி மிசை யின்று
மனிதர்க் கெல்லாம் தலைப்படு மனிதன்,
தர்மமே உருவம், மோஹன தாஸ
கர்ம சந்திர காந்தி" யென் றுரைத்தான்.
அத்தகைய காந்தியை அரசியல் நெறியிலே
தலைவனுகக் கொண்டு புவிமிசைத் தருமமே
அரசிய லதனிலும், பிற இயலனைத்திலும்
வெற்றி தருமமென வேதஞ் சொன்னதை
முற்றும் பேண முற்பட்டு நின்ருர்
பாரத மக்கள். இதனுற் படைஞர் தஞ்
செருக்கொழிந் துலகி லறந் திறம்பாத
கற்ருேர் தலைப்படக் காண்போம்—விரைவிலே.
(வெற்றி கூறுமின் ; வெண் சங் கூதுமின் !)

---

*"இன்ப வளம்" என்பதில் பவளம என்ற மணியின் பெயர் அமைந்திருப்பது காண்க.

தரவுகோச்சகக் கலிப்பா

5. ஊதுமினோ வெற்றி!
        ஒலிமினோ வாழ்த் தொலிகள்!
ஓதுமினோ! வேதங்கள்!
        ஓங்குமினோ! ஓங்குமினோ!
தீது சிறிதும் பயிலாச்
        [1]செம்மணி மாநெறி கண்டோம்;
வேதனைக ளினி வேண்டா;
        விடுதலையோ திண்ணமே.

வஞ்சி விருத்தம்

6. திண்ணங் காணீர்! பச்சை
வண்ணன் பாதத் தாணை;
எண்ணங் கெடுதல் வேண்டா!
திண்ணம், விடுதலை திண்ணம்.

கலிப்பா

7. “விடுதலை பெறுவீர் விரை வா நீர்
வெற்றி கொள்வீர்” என்றுரைத் தெங்கும்
கெடுத லின்றி நந் தாய்த் திருநாட்டின்
கிளர்ச்சி தன்னை வளர்ச்சி செய்கின்றான்;
“சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை;
சோர்வு வீழ்ச்சிகள் தொண்டருக் கில்லை;
எடுமினோ அறப்போரினை” யென்றான்
எங்[2]கோ மேதக மேந்திய காந்தி!

---

1. செம் மணி மா நெறி—செவ்விய அழகிய பெரிய நெறி; அஃது ஒத்துழையாமை செம்மணி—மாணிக்கம்.
2. கோமேதகம் என்ற ரத்னப் பெயர் தொனித்தல் காண்க.

அறுசீர் விருத்தம்

8. காந்தி சேர் பதுமராகக்
கடிமலர் வாழ் ஸ்ரீ தேவி
போந்து நிற்கின்றா ளின்று
பாரதப் பொன்னா டெங்கும்;
மாந்த ரெல்லோருஞ் சோர்வை
அச்சத்தை மறந்துவிட்டார்;
காந்தி சொற் கேட்டார், காண்பார்
விடுதலை கணத்தி னுள்ளே.

எழுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

9. கணமெனு மென்றன் கண்முனே வருவாய்,
பாரத தேவியே, கனல்கால்
இணைவிழி வாலவாய* மாஞ் சிங்க
முதுகினி லேறி வீற்றிருந்தே;
துணை நினை வேண்டு நாட்டினர்க் கெல்லாந்
துயர் கெட விடுதலை யருளி
மணிநகை புரிந்து திகழ் திருக்கோலங்
கண்டு நான் மகிழ்ந்திடுமாறே.

---

*வால் அவாயமாம் சிங்கம்—பயங்கரமான வாலினை யுடைய சிங்கம். வாலவாயம் என்பது வைடூர்யத்தின் பெயர்.

14. மாதாவின் துவஜம்

பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு வர்ணமெட்டு

பல்லவி

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்

சரணங்கள்

1. *ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்*
உச்சியின் மேல், 'வந்தே மாதர' மென்றே
பாங்கி னெழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர் (தாயின்)

2. *பட்டுத் துகிலென லாமோ?—அதிற்*
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித்தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்
(தாயின்)

3. *இந்திரன் வச்சிர மோர் பால்—அதில்*
எங்கள் துருக்கரிளம்பிறையோர்பால் (தாய்)
மந்திர நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ?
(தாயின்)

4. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நம்பற் குரிய ரவ்வீரர்;—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பர்
(தாயின்)

5. அணியணி யாயவர் நிற்கும்—இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர்;
(தாயின்)

6. செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,

7. கன்னட ரெட்டிய ரோடு,—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்களொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்,

8. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,

9. பஞ்ச நதத்துப் பிறந்தோர்,—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்த நன்னாட்டார்,
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்

10. சேர்ந்ததைக் காப்பது காணீர் !—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க ! (தாயின்)

---

15. எங்கள் தாய்

காவடிச்சிந்தில் ஆறுமுகவடி வேலவனே **என்ற வர்ணமெட்டு.**

1. தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்.

2. யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்.

3. முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள், எனிற்
சிந்தனை யொன்றுடையாள்.

4. நாவினில் வேதமுடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள்—தனை
மேவினார்க் கின்னருள் செய்பவள், தீயரை
வீட்டிடு தோளுடையாள்.

5. அறுபது கோடி தடக்கை களாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத் துகள்
செய்து கிடத்துவள் தாய்.

6. பூமியினும் பொறை மிக்குடை யாள் பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாள்—எனில்
தோமிழைப் பார்முன் நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனை யவள் தாய்.

7. கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரி கொண்டேழுல காளு
மொருவனை யுந்தொழு வாள்.

8. யோகத்தி லேநிக ரற்றவ ளுண்மையு
மொன்றென நன்றறிவாள்—உயர்
போகத்தி லேயு நிறைந்தவ ளெண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

9. நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயி னவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள்.

10. வெண்மை வளரிம யாசலன் றந்த
விறன் மக ளாமெங்கள் தாய்—அவன்
திண்மை மறையினுந் தான்மறை யாணித்தஞ்
சீருறு வாளெங்கள் தாய்.

---

16. வெறிகொண்ட தாய்

1. பேயவள் காணெங்க ளன்னை—பெரும்
பித்துடைய ளெங்க ளன்னை.
காயழ லேந்திய பித்தன்—தனைக்
காதலிப்பா ளெங்க ளன்னை. (பேயவள்)

2. இன்னிசை யாமின் பக் கடலில்—எழுந்
தெற்றும் அலைத்திரள் வெள்ளம்
தன்னிட மூழ்கித் திளைப்பாள்—அங்கு
தாவிக் குதிப்பாளெம் மன்னை. (பேயவள்)

3. தீஞ்சொற் கவிதையஞ் சோலை—தனில்
தெய்வீக நன்மணம் வீசும்
தேஞ்சொரி மாமலர் சூடி—மதுத்
தேக்கி நடிப்பளெம் மன்னை (பேயவள்)

4. வேதங்கள் பாடுவள் காணீர்—உண்மை
வேல் கையிற் பற்றிக் குதிப்பாள்
ஓதருஞ் சாத்திரங் கோடி—உணர்ந்
தோதியுலகெங்கும் விதைப்பாள்.(பேயவள்)

5. பாரதப் போரெனி லெளிதோ?—விறற்
பார்த்தன் கை வில்லிடை யொளிர்வாள்
மாரதர் கோடி வந்தாலும்—கணை
மாய்த்துக்குருதியிற் றிளைப்பாள்.(பேயவள்)

---

17. நடிப்புச் சுதேசிகள்

பழித்தறி வுறுத்தல்

கிளிக் கண்ணிகள்

1. நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வா ரடீ—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடீ.

2. கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ—கிளியே
நாளில் மறப் பாரடீ.

3. சொந்த அரசும் புவிச்
சுகங்களும் மாண்புகளும்
அந்தகர்க் குண்டாகுமோ?—கிளியே
அலிகளுக் கின்ப முண்டோ?

4. கண்க ளிரண் டிருந்தும்
காணுந் திறமை யற்ற
பெண்களின் கூட்டமடீ—கிளியே
பேசிப் பய னென்னடீ.

5. யந்திர சாலை யென்பர்
எங்கள் துணிக ளென்பர்
மந்திரத்தாலே யெங்கும்—கிளியே
மாங்கனி வீழ்வதுண்டோ?

6. உப்பென்றும் சீனி யென்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடீ—கிளியே
செய்வ தறியாரடீ.

7. தேவியர் மான மென்றும்
தெய்வத்தின் பக்தி யென்றும்
நாவினாற் சொல்வதல்லால்—கிளியே
நம்புத லற்றாரடீ.

8. மாதரைக் கற்பழித்து
வன் கண்மை பிறர் செய்யப்
பேதைகள் போலுயிரைக்—கிளியே
பேணி யிருந்தாரடீ.

9. தேவி கோயிலிற் சென்று
தீமை பிறர்கள் செய்ய
ஆவி பெரிதென் றெண்ணிக்—கிளியே
அஞ்சிக் கிடந் தாரடீ.

10. அச்சமும் பேடிமையும்
அடிமைச் சிறுமதியும்
உச்சத்திற் கொண்டாரடீ—கிளியே
ஊமைச் சனங்க ளடீ.

11. ஊக்கமும் உள்வலியும்
உண்மையிற் பற்றுமில்லா
மாக்களுக்கோர் கணமும்—கிளியே
வாழத் தகுதி யுண்டோ?

12. மானம் சிறிதென் றெண்ணி
வாழ்வு பெரிதென் றெண்ணும்
ஈனர்க் குலகந் தனில்—கிளியே
இருக்க நிலைமை யுண்டோ?

13. சிந்தையிற் கள் விரும்பிச்
சிவ சிவ வென்பது போல்
வந்தே மாதர மென்பார்—கிளியே
மனதி லதனைக் கொள்ளார்.

14. பழமை பழமை யென்று
பாவனை பேசலன்றிப்
பழமை யிருந்த நிலை—கிளியே
பாமர ரேதறிவார்?

15. நாட்டி லவமதிப்பும்
நாணின்றி யிழி செல்வத்
தேட்டில் விருப்புங்கொண்டே—கிளியே
சிறுமை யடை வாரடீ.

16. சொந்தச் சகோதரர்கள்
துன்பத்திற் சாதல் கண்டும்
சிந்தை யிரங்காரடீ—கிளியே
செம்மை மறந்தாரடீ.

17. பஞ்சத்தும் நோய்களிலும்
பாரதர் புழுக்கள் போல்
துஞ்சத் தம் கண்ணாற் கண்டும்—கிளியே
சோம்பிக் கிடப்பாரடீ.

18. தாயைக் கொல்லும் பஞ்சத்தைத்
தடுக்க முயற்சி யுறார்
வாயைத் திறந்து சும்மா—கிளியே
வந்தே மாதர மென்பார்.

18. கோக்கலே சாமியார் பாடல்

"இராமலிங்க சுவாமிகள் [களங்கமறப் பொதுநடனங் கண்டு கொண்ட தருணம்" என்று பாடிய பாட்டைத் திரித்துப் பாடியது.]

களக்க முறும் மார்லி நடம்
கண்டுகொண்ட தருணம்
கடைச் சிறியேன் உளம் பூத்துக்
காய்த்த தொரு கனிதான்
விளக்க முறப் பழுத்திடுமோ
வெம்பி விழுந்திடுமோ?
வெம்பாது விழினு மென்றன்
கரத்திலகப்படுமோ?
வளர்த்த பழம் கர்சானென்ற
குரங்கு கவர்ந்திடுமோ?
மற்றிங்ஙன் ஆட்சி செய்யும்
அணில் கடித்து விடுமோ?
துளக்க மறயான் பெற்றிங்
குண்ணுவனே, அல்லால்
தொண்டை விக்குமோ, ஏதும்
சொல்லரியதாமோ?

19. தொண்டு செய்யும் அடிமை

ஸ்வராஜ்யம் வேண்டுமென்ற பாரதவாஸிக்கு
ஆங்கிலேய உத்தியோகஸ்தன் கூறுவது

[நந்தனார் சரித்திரத்திலுள்ள "மாடு தின்னும் புலையா—உனக்கு மார்கழித்திருநாளா" என்ற பாட்டின் வர்ண மெட்டு.]

1. தொண்டு செய்யு மடிமை—உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ—அதற்குப்
பாத்திர மாவாயோ? (தொண்டு)

2. ஜாதிச் சண்டை போச்சோ?—உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய் கண்முன்
நிற் கொணாது போடா (தொண்டு)

3. அச்ச நீங்கினாயோ?—அடிமை!
ஆண்மை தாங்கினாயோ?
பிச்சை வாங்கிப் பிழைக்கும்—ஆசை
பேணுத லொழித்தாயோ? (தொண்டு)

4. கப்பலேறு வாயோ?—அடிமை!
கடலைத் தாண்டு வாயோ?
குப்பை விரும்பும் நாய்க்கே—அடிமை!
கொற்றத் தவிசு முண்டோ? (தொண்டு)

5. ஒற்றுமை பயின்றாயோ ?—அடிமை ?
உடம்பில் வலிமை யுண்டோ ?
வெற்றுரை பேசாதே—அடிமை !
விரிய மறிவாயோ ? (தொண்டு)

6. சோர்ந்து வாழு வீரோ ?—உங்கள்
சிறுமைக் குணங்கள் போச்சோ ?
சேர்ந்து வீழ்தல் போச்சோ ?—உங்கள்
சோம்பரைத் துடைத்தீரோ ? (தொண்டு)

7. வெள்ளை நிறத்தைக் கண்டால்—பதறி
வெருவலை யொழித்தாயோ ?
உள்ளது சொல்வேன் கேள்—சுதந்திரம்
உனக்கில்லை மறந்திடடா. (தொண்டு)

8. நாடு காப்பதற்கே—உனக்கு
ஞானஞ் சிறிது முண்டோ ?
வீடு காக்கப் போடா—அடிமை
வேலை செய்யப் போடா. (தொண்டு)

9. சேனை நடத்துவாயோ ?—தொழும்புகள்
செய்திட விரும்பாயோ ?
ஈனமான தொழிலே—உங்களுக்
கிசைவதாகும் போடா. (தொண்டு)

---

20. மேத்தா திலகருக்குச் சொல்லுவது

[புதிய கட்சித் தலைவரை நோக்கி நிதானக் கட்சியார் சொல்லுதல்]

சிதம்பர பதவியாகிய முக்தியிலே, நந்தனர் அடங்காத தாகம் கொண்டிருந்தார். அது அவரை அடிமை கொண்டிருந்த ஆண்டைக்கு மனமில்லை. அவன் நந்தனரைப் பலவித இம்சைகளுக்கு உட்படுத்தினன்; அதுவுமின்றிச் சேரியிலிருந்த நிதானப் பறையர்கள் பலர் நந்தனர் சிதம்பரத்தைப் பற்றி நினைக்கலாகாதென்று போதனை செய்தார்கள். அந்த நிதானஸ்தர்களிலே ஒருவர் பாடிய பாட்டின் கருத்தையும் வர்ணமெட்டையும் தழுவிப் பின் வரும் பாடல் செய்யப்பட்டிருக்கிறது. "ஓய் நந்தனரே, நம்ம ஜாதிக் கடுக்குமோ, நியாயந்தானே நீர் சொல்லும்" என்ற வர்ணமெட்டு.

பல்லவி

ஓய் திலகரே, நம்ம ஜாதிக் கடுக்குமோ?
செய்வது சரிபோ, சொல்லும்.

கண்ணிகள்

1. முன்னறியாப் புது வழக்கம்—நீர்
மூட்டி விட்டதிந்தப் பழக்கம்—இப்போ
தென்னகரிலு மிது முழக்கம்—மிக
இடும்பை செய்யுமிந்த ஒழுக்கம். (ஓய் திலகரே)

2. சுதந்திர மென்கிற பேச்சு—எங்கள்
தொழும்புக ளெல்லாம் வீணாய்ப் போச்சு—இது
மதம் பிடுத்தது போலாச்சு—எங்கள்
மனிதர்க்கெல்லாம் வந்ததேச்சு. (ஓய் திலகரே)

3. வெள்ளை நிறத்தவர்க்கே ராஜ்யம்—அன்றி
வேறெவ ருக்குமது தியாஜ்யம்—சிறு
பிள்ளைகளுக்கே யுபதேசம்—நீர்
பேசி வைத்த தெல்லா மோசம். (ஓய் திலகரே)

21. நிதானக் கட்சியார் சுதேசியத்தைப் பழித்தல்

நந்தனார் சரித்திரத்திலே சேரிப் பறையர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து நந்தனாரையும் அவரது கட்சியாரையும் பழிக்கின்றார்கள். சேரியிலே மாட்டிறைச்சி யுண்டு புலை வாழ்வு வாழ்ந்துகொண்டு, ஆண்டைப் பார்ப்பானுக்கு அடிமை செய்வதே ஸ்வர்க்க மென்றறியாமல், சிதம்பரப் பயித்தியங் கொண்டலையும் நந்தனாராலும், அவருடைய சீடர்களாலும் பெரிய கேடுகள் விளையக் கூடுமென்று வருத்தங்கொண்டு "நாம் என்ன செய்வோம் புலையரே இந்தப் பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம்" என்று யோசிக்கிறார்கள். அந்தப் பாட்டின் கருத்தையும் வர்ண மெட்டையும் தழுவிப் பின் வரும் பாடல் எழுதப்பட்டிருக்கிறது. மேத்தா, கோகலே முதலிய நிதானஸ்தர்கள், நமது தேச விமோசன மென்னுஞ் சிதம்பரத்தை எண்ணி ஆசை கொண்டு பரவச நிலையி லிருக்குந் திலக முனிவராலும், அவரது கட்சியாராலும் நாட்டிற்குக் கெடுதி விளைவு' மென்று பேசும் விஷயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தேசீய கீதங்கள்

ராகம்—புன்னாகவராளி. தாளம்—ரூபகம்.

பல்லவி

நாமென்ன செய்வோம், துணைவரே—இந்த
பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம். (நாம்)

சரணங்கள்

1. திலக னொருவனாலே யிப்படி யாச்சு
செம்மையுந் தீமையு மில்லாமலே போச்சு
பலதிசையும் துஷ்டர் கூட்டங்களாச்சு
பையல்கள் நெஞ்சில்பயமென்பதேபோச்சு. (நாம்)

2. தேசத்தி லெண்ணற்ற பேர்களுங்கெட்டார்
செய்யுந் தொழில் முறை யாவையும் விட்டார்
பேசுவோர் வார்த்தை தாதா சொல்லி விட்டார்
பின்வர வறியாமல் சுதந்திரம் தொட்டார் (நாம்)

3. பட்டம் பெற்றோர்க்கு மதிப் பென்பது மில்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ ரில்லை
சட்டம் மறந்தோர்க்குப் பூஜை குறைவில்லை
*சர்க்காரிடம் சொல்லிப் பார்த்தும் பயனில்லை
(நாம்)

4. சீமைத் துணியென்று லுள்ளங் கொதிக்கிறார்
சீரில்லை என்றுலோ எட்டி மிதிக்கிறார்
தாமெத்தையோ 'வந்தே' யென்று துதிக்கிறார்
தரமற்ற வார்த்தைகள் பேசிக் குதிக்கிறார். (நாம்)

---

*பழைய கட்சியார் புதுக் கட்சியாரைப் பற்றி ஸர்க்காரிடங் கோள் மூட்டியும் பயனில்லை என்றாய்விட்டது.

22. ஆங்கிலேயன்
ஒரு தேசபக்தனுக்குக் கூறுவது

தண்டகம்—ஆதிதாளம்.

1. நாட்டிலெங்கும் ஸ்வதந்திர வாஞ்சையை
நாட்டினாய்—கனல்—மூட்டினாய்
வாட்டி யுன்னை மடக்கிச் சிறைக்குள்ளே
மாட்டுவேன்—வலி—காட்டுவேன். (நாட்டி)

2. கூட்டங் கூடிவந் தேமா தரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்
ஓட்ட நாங்க ளெடுக்க வென்றே கப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய். (நாட்டி)

3. கோழைப்பட்ட ஜனங்களுக் குண்மைகள்
கூறினாய்—சட்ட—மீறினாய்
ஏழைப் பட்டிங் கிறத்த லிழிவென்றே
யேசினாய்—வீரம்—பேசினாய். (நாட்டி)

4. அடிமைப் பேடிகள் தம்மை மனிதர்கள்
ஆக்கினாய்—புன்மை—போக்கினாய்
மிடிமை போதும் நமக்கென் றிருந்தோரை
மீட்டினாய்—ஆசை—யூட்டினாய். (நாட்டி)

5. தொண்டொன் றே தொழிலாக்கொண் டிருந்தோ
தூண்டினாய்—புகழ் வேண்டினாய் [ரைத்
கண்ட கண்ட தொழில் கற்க மார்க்கங்கள்
காட்டினாய்—சோர்வை—யோட்டினாய். (நாட்டி)

6. எங்கு மிந்த சுயராஜ்ய விருப்பத்தை
ஏவினுய்—விதை—தூவினுய்
சிங்கம் செய்யும் தொழிலைச் சிறு முயல்
செய்யவோ—நீங்கள்—உய்யவோ ?

7. சுட்டு வீழ்த்தியே புத்தி வருத்திடச்
சொல்லுவேன்—குத்திக்—கொல்லுவேன்
தட்டிப் பேசுவோ ருண்டோ ?—சிறைக்குள்ளே
தள்ளுவேன்—பழி—கொள்ளுவேன். (நாட்டி,

---

23. தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி

1. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்; இனி—யஞ்சிடோம்;
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ? தெய்வம்—பார்க்குமோ?

2. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்; முடி—தாழ்த்துவோம்;
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ ?—அவமானமோ ?

3. பொருளெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை
போகவோ? நாங்கள் —சாகவோ? [கொண்டு
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளைகள்
அல்லமோ? உயிர்—வெல்லமோ?

4. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச் —சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ? பிடி—வாதமோ?

5. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ? மனஸ் —தாபமோ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ இதிற்—செற்றமோ?

6. ஒற்றுமை வழியொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம்; நன்கு—தேர்ந்திட்டோம்;
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலாம்
மலைவுறோம்; சித்தம்—கலைவுறோம்.

7. சதையைத் துண்டு துண்டாக்கினு முன்னெண்
சாயுமோ? —ஜீவன்—ஓயுமோ? [ணம்
இதையத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ? நெஞ்சம்—வேகுமோ?

---

24. பாரத தேவியின் அடிமை

நந்தன் சரித்திரத்திலுள்ள "ஆண்டைக் கடிமைக் கார னல்லவே" என்ற பாட்டின் வர்ணமெட்டையும் கருத்தையும் பின் பற்றி எழுதப்பட்டது.

பல்லவி

அன்னியர் தமக் கடிமை யல்லவே—நான்
அன்னியர் தமக் கடிமை யல்லவே.

சரணங்கள்

1. மன்னிய புகழ் பாரத தேவி
தன்னிரு தாளிணைக் கடிமைக் காரன். (அன்)

2. இலகு பெருங்குணம் யாவைக்கு மெல்லையாம்
திலக முனிக்கொத்த அடிமைக்காரன். (அன்)

3. வெய்ய சிறைக்குள்ளே புன்னகையோடு போம்
ஐயன் பூபேந்த்ரனுக் கடிமைக் காரன். (அன்)

4. காலர் முன்னிற்பினும் மெய்தவறு வெங்கள்
பாலர் தமக்கொத்த அடிமைக்காரன். (அன்)

5. காந்தன விட்டாலும் தர்மம் விடா ப்ரம்ம
பாந்தவன் றனிணைக் கடிமைக்காரன். (அன்)

25. லாஜபத்ராய் துதி

விருத்தம்

1. விண்ணகத்தே யிரவிதனை வைத்தாலும்
அதன் கதிர்கள் விரைந்து வந்து
கண்ணகத்தே யொளிதருதல் காண்கிலமோ?
நின்னையவர் கனன்றிந் நாட்டு
மண்ணகத்தே வாழாது புறஞ்செய்யும்
யாங்களெலா மறக்கொ ணாதெம்
எண்ணகத்தே, லாஜபதி, யிடையின்றி
நீ வளர்தற் கென்செய் வாரே?

2. ஒரு மனிதன் றனைப்பற்றிப் பல நாடு
கடத்தியவற் கூறு செய்தல்
அருமையிலை; எளிதினவர் புரிந்திட்டா
ரென்றிடினும் அந்த மேலோன்
பெருமையை நன் கறிந்தவனைத் தெய்வமென
நெஞ்சினுளே பேணி
வருமனித ரெண்ணற்றார் இவரையெல்லாம்
ஓட்டி யெவர் வாழ்வ திங்கே?

3. பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றார்?
ஆரன்பு நாரணன்பா லிரணியன்சேய்
செய்ததினா லவனுக் குற்ற

கோரங்கள் சொலத்தகுமோ? பாரதநாட்
டிற் பக்தி குலவி வாழும்
வீரங்கொள் மனமுடையார் கொடுந்துயரம்
பல வடைதல் வியத்தற் கொன்ரு?

---

26. லாஜ்பத்ராய் பிரலாபம்

கண்ணிகள்

1. நாடிழந்து மக்களேயு நல்லாளே யும்பிரிந்து
வீடிழந்திங் குற்றேன் விதியிஃனயென் சொல்
கேனே.

2. வேதமுனி போன்ருர் விருத்தரா மெந்தை யிரு
பாத மலர் கண்டு பரவப் பெறுவேஞே?

3. ஆசைக்குமர னருச்சுனனேப் போல்வான் றன்
மாசற்ற சோதி வதனமினிக் காண்பேஞே?

4. அன்றிலேப் போன் றென்னே யரைக்கணமேனும்
பிரிந்தால்
குன்றி மனஞ் சோர்வாளிக்கோலம் பொறுப்பாளோ;

5. வீடு முறவும் வெறுத்தாலு மென்னருமை
நாடு பிரிந்த நலிவினுக் கென் செய்கேனே?

6. ஆதிமறை தோன்றிய நல் லாரிய நாடெங்நாளு
நீதிமறை வின்றி நிலைத்த திருநாடு.

7. சிந்துவெனுந் தெய்வத் திருநதியு மற்றதிற்சேர்
ஐந்துமணி யாறும் அளிக்கும் புன ஞடு.

8. ஐம்புலனை வென்ற அறவோர்க்கு மாற்றலர்தம்
வெம்புலனை வென்ற எண்ணில் வீரருக்குந்
தாய்நாடு.

9. நல்லறத்தை நாட்டுதற்கு நம் பெருமான்
கௌரவராம்
புல்லரைச் செற்றுழ்த்த புனிதப் பெருநாடு.

10. கன்ஞணூந் திண்டோட்களவீரன் பார்த்தனொரு
வின்ஞ ெஞலி கேட்ட மேன்மைத் திருநாடு.

11. கன்ன னிருந்த கருணைநிலம் தர்மனெனு
மன்ன னறங்கள் வளர்த்த புகழ் நாடு.

12. ஆரியர்தம் தர்மநிலை ஆதரிப்பான் வீட்டுமஞர்
நாரியர்தங் காதல் துறந்திருந்த நன்ஞடு.

13. வீமன் வளர்ந்த விறஞடு வில்லசுவத்
தாம னிருந்து சமர்புரிந்த வீரநிலம்.

14. சீக்கரெனு மெங்கள் விறற்சிங்கங்கள்வாழ்தருநல்
ஆக்கமுயர் குன்ற மடர்ந்திருக்கும் பொன்ஞடு.

15. ஆரியர் பாழாகா தருமறையின் உண்மைதந்த
சீரியர் மெய்ஞ்ஞான தயாநந்தர் திருநாடு.

16. என்னருமைப் பாஞ்சால மென்றேனும்
காண்பேனோ?
பன்னரிய துன்பம் படர்ந்திங்கே மாய்வேனோ?

17. ஏதெல்லாம் பாரதத்தே இந்நாள் நடப்பனவோ?
ஏதெல்லாம் யானறியா தென்மனிதர்
பட்டனரோ?

18. என்னை நினைந்து மிரங்குவாரோ? அல்லாது
பின்னைத் துயர்களிலென் பேரு மறந்திட்
டாரோ?

19. தொண்டுபட்டு வாடு மென்றன் தூய பெரு
நாட்டிற்
கொண்டு விட்டங் கென்னையுடன் கொன்றாலு
மின்புறுவேன்.

20. எத்தனை ஜன்மங்கள் இருட்சிறையி லிட்டாலும்
தத்துபுனற் பாஞ்சாலந் தனில் வைத்தால்
வாடுகிலேன்.

---

27. தாதாபாய் நவுரோஜி

கவிகள்

1. முன்னாளி லிராமபிரான் கோதமனா
திய புதல்வர் முறையினின்று
பன்னாடு முடி வணங்கத் தலைமை நிறுத்
தியவெமது பாரதகண்ட

மின்னுளிங் கிந்நாளின் முதியோளாய்ப்
பிறரெள்ள வீழ்ந்தகாலை
அன்னுளைத் துயர் தவிர்ப்பான் முயல்வர் சில
மக்களவ ரடிகள் சூழ்வாம்.

2. அவ்வறிஞ ரனை வோர்க்கு முதல்வனும்
மைந்தன்ற னன்னை கண்ணீ
ரெல்வகையி னுந் துடைப் பேனின்றேலென்
உயிர் துடைப்பே னென்னப் போந்தி
யௌவனநாள் முதற் கொடுதா
னெண் பதின்மேல் வயதுற்றவின்று காறும்
செவ்வியுறத் தனதுடலம் பொருளாவி
யானுழைப்புத் தீர் தவிலான்.

3. கல்வியைப்போ லறிவுமறி வினைபோலக்
கருணையுமக் கருணை போலப்
பல்விதலூக் கங்கள்செயுந் திறனு மொரு
நிகரின்றிப் படைத்த வீரன்
வில்விறலாற் போர் செய்தல் பயனிலதா
மெனவதனை வெறுத்தே யுண்மைச்
சொல்விறலாற் போர்செய்வோன் பிறர்க்கன்றித்
தனக்குழையாத் துறவி யாவோன்.

4. மாதா வாய்விட்டலற வதைச் சிறிது
மதியாதே வாணுள் போக்குந்
தீதாவார் வரினுமவர்க் கினிய சொலி
நன்குணர்த்துஞ் செவ்வி யாளன்

வேதாவா யினுமவனுக் கஞ்சாமே யுண்மை
நெறி விரிப்போ னெங்கள்
தாதாவாய் விளங்குறுநற் ருதாபாய்
நவுரோஜி சரணம் வாழ்க!

5. எண்பஃ தாண்டிருந்தவ னினிப்பல்லாண்
டிருந்தெம்மை யினிது காக்க!
பண்பல்ல நமக்கிழைப்போ ரறிவுதிருந்துக!
எமது பாரத நாட்டுப்
பெண்பல்லார் வயிற்றினுமந் நவுரோஜி
போற் புதல்வர் பிறந்து வாழ்க!
விண்புல்லு மீன்களென லவனன்று
ரெவ்வயினு மிகுக மன்னே.

---

28. பூபேந்திர விஜயம்

விருத்தம்

1. பாபேந்திரியஞ் செறுத்த எங்கள்
விவேகானந்தப் பரமன் ஞான
ரூபேந்திரன் றனக்குப் பின்வந்தோன்
விண்ணவர்த முலகை யாள்ப்ர

தாபேந்திரன் கோபமுறினு மதற்
கஞ்சியறந் தவிர்க்கிலாதான்
பூபேந்திரப் பெயரோன பாரதநாட்டிற்
கடிமை பூண்டு வாழ்வோன்.

2. வீழ்த்தல் பெறத் தருமமெலாம் மறமனைத்துங்
கிளைத்துவர மேலோர் தம்மைத்
தாழ்த்ததமர் முன்னோங்க நிலைபுரண்டு
பாதகமே ததும்பி நிற்கும்
பாழ்த்த கலியுகஞ் சென்று மற்றொருகம்
அருகில் வரும் பான்மை தோன்றக்
காழ்த்தமன வீர முடன் யுகாந்தரத்தி
னிலையினிது காட்டி நின்றான்.

3. மண்ணாளு மன்னரவன் றனைச் சிறை செய்
திட்டாலும் மாந்தரெல்லாங்
கண்ணாகக் கருதியவன் புகழோதி வாழ்த்தி
மனங் களிக்கின்றாரால்;
எண்ணாது நற்பொருளைத் தீதென்பார்
சிலருலகி லிருப்ப ரன்றே,
விண்ணாரும் பரிதியொளி வெறுத்தொருபுள்
இருளினிது விரும்பல் போன்றே?

4. இன்னாத பிறர்க்கெண்ணான் பாரத நாட்டிற்
கிரங்கி யிதய நைவான்
ஒன்றாரென் றெவருமிலான் உலகனைத்து
மோருயிரென் றுணர்ந்த ஞானி

அன்னானைச் சிறைப்படுத்தார் மேலோர்தம்
பெருமையெது மறிகிலாதார்,
முன்னாளிற்றுன் பின்றி யின்பம் வரா தெனப்
பெரியோர் மொழிந்தா ரன்றே?

---

29. வாழ்க திலகன் நாமம்

பல்லவி

வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே!
வீழ்க கொடுங் கோன்மை! வீழ்க! வீழ்கவே!

சரணங்கள்

1. நாலுதிசையும் ஸ்வாதந்தர்ய நாதம் எழுகவே!
நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!
ஏலுமனிதர் அறிவையடர்க்கும் இருள்அழிகவே!
எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே!.
(வாழ்க)

2. கல்வி யென்னும் வலிமைகொண்ட கோட்டை
[கட்டினான்-நல்ல
கருத்தினா லதனைச்சூழ்ந்தொ ரகழி வெட்டினான்
சொல்விளக்க மென்றதனிடைக் கோயிலாக்கி-
[னான்.
ஸ்வாதந்தர்ய மென்றதன் மேற் கொடியைத்
[தூக்கினான். (வாழ்க)

3. துன்பமென்னும் கடலைக் கடக்குந் தோணி
யவன் பெயர்
சோர் வென்னும் பேயை யோட்டுஞ் சூழ்ச்சி
யவன் பெயர்
அன்பெனுந் தேனூறித் ததும்பும் புதுமலர்
அவன் பேர்
ஆண்மையென்னும் பொருளைக்காட்டும் அறிகுறி
யவன் பெயர். (வாழ்க)

---

30. லோகமான்ய பால கங்காதர திலகர்

1. நாமகட்குப் பெருந்தொண் டியற்றிப்பண்
டைட்டினோர்தங் கலையினு மவ்வவர்
தாமகத்து வியப்பப் பயின்றொரு
சாத்திரக் கடலென்ன விளங்குவோன் ;
மாமகட்குப் பிறப்பிட மாகமுன்
வாழ்ந்திந் நாளில் வறண்டயர் பாரதப்
பூமகட்கு மனந்துடித்தே யிவள்
புன்மை போக்குவ லென்ற விரதமே.

2. நெஞ்சகத்தொர் கணத்திலு நீங்கிலான்
நீதமேயோ ருருவெனத் தோன்றினோன்
வஞ்சகத்தைப் பகையெனக் கொண்டதை
மாய்க்குமாறு மனதிற் கொதிக்கின்றோன்
துஞ்சு மட்டுமிப் பாரத நாட்டிற்கே
தொண்டிழைக்கத் துணிந்தவர் யாவரும்
அஞ்செழுத்தினைச் சைவர் மொழிதல் போல்
அன்பொ டோதும் பெயருடை யாரியன்.

3. வீரமிக்க மராட்டியர் ஆதர
மேவிப் பாரத தேவி திருநுதல்
ஆரவைத்த திலக மெனத் திகழ்
ஐய னல்லிசைப் பால கங்காதரன்
சேரலர்க்கு நினைக்கவுந் தீயென
நின்ற வெங்கள் திலக முனிவர்கோன்
சீரடிக் கமலத் தினை வாழ்த்துவேன்
சிந்தை தூய்மை பெறுகெனச் சிந்தித்தே.

31. மஹாத்மா காந்தி பஞ்சகம்

1. வாழ்க நீ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்

பாழ்பட்டு நின்ற தாமோர்
　　பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
　　மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

2. அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
　　விடுதலை யார்ந்து, செல்வம்,
குடிமையி லுயர்வு, கல்வி,
　　ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
　　படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்,
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
　　புவிக்குளே முதன்மை யுற்றாய்!

வேறு

3. கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
　　மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடி மின்னல்காக்கும் குடைசெய்தானென்கோ?
　　என் சொலிப் புகழ்வதிங் குனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
　　வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
　　படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்.

4. தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
　　பிறனுயிர் தன்னையும் கணித்தல்;
மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
　　கடவுளின் மக்களென் றுணர்த்தல்;

இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங
கிழிபடு போர், கொலை, தண்டம்
பின்னரியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான் !

5. பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய் ;
அதனிலுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய் ;
நெருங்கிய பயன்சேர் 'ஒத்துழையாமை'
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே.

---

32. அபேதாநந்த ஸ்வாமிகளின் மீது ஸ்தோத்திரக் கவிகள்

சுருதியு மரிய உபநிட தத்தின்
தொகுதியும் பழுதற வுணர்ந்தோன்
கருதிடற் கரிய பிரம நன்னிலையைக்
கண்டுபே ரொளியினிடைக் களித்தோன்

அரிதினிற் காணு மியல் பொடு புவியி
னப்புறத் திருந்து நண்பகலிற்
பரிதியி ளுளியும் சென்றிடாநாட்டில்
மெய்யொளி பரப்பிடச் சென்றேன்.

வேறு

ஒன்றே மெய்ப்பொருளாகு முயிர்களெலா
மதன் வடிவா மோருங்காலை
என்றேவ னுன்றேவ னென்றுலகர்
பகைப்பதெலா மிழிவாமென்று
நன்றேயிங் கறிவுறுத்தும் பரமகுரு
ஞானமெனும் பயிரை நச்சித்
தின் றேபா ழாக்கிடுமைம் புலன் களெனும்
விலங்கினத்தைச் செகுத்த வீரன்.

வேறு

வானந்தம் புகழ் மேவி விளங்கிய
மாசிலாத குரவனச் சங்கரன்
ஞானந்தங்கு மிந்நாட்டினைப் பின்னரு
நண்ணினனெனத் தேசுறு மவ்விவே
கானந்தப் பெருஞ்சோதி மறைந்தபின்
அவனிழைத்த பெருந்தொழி லாற்றியே
ஊனந் தங்கிய மானிடர் தீதெலா
மொழிக்குமாறு பிறந்த பெருந்தவன்.

---

*அமெரிக்கா கண்டம்: நமது கண்டத்தில் பகலாயிருக்கும்போது அங்கே இருளாக இருக்குந் தன்மையுடையது.

வேறு

தூய அபேதானந்த னெனும் பெயர் கொண்
டொளிர்தரு மிச்சுத்த ஞானி
நேயமுட னிந்நகரிற் றிப்பாதஞ்
சாத்தியரு ணெஞ்சிற் கொண்டு
மாயமெலா நீங்கியினி தெம்மவர் நன்
னெறிசாரும் வண்ணம் ஞானம்
தோயநனி பொழிந்திடுமோர் முகில் போன்றான்
இவன் பாதங்கள் துதிக்கின்றோமே.

---

33. சுதந்திரப் பெருமை

"தில்லை வெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ" என்னும் வர்ணமெட்டு.

1. வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத் தொண்டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பாரோ? (வீர)

3. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ?

4. மானுட ஜன்மம் பெறுவதற்கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினு மூண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ? (வீர)

7. வந்தே மாதர மென்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவாரோ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்மதை மறப்பாரோ? (வீர)

---

34. சுதந்திர தாகம்

கண்ணிகள்

1. கண்ணீர்விட் டோவளர்த்தோம்?
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்;
கருகத் திருவுளமோ?

2. எண்ணமெலா நெய்யாக
எம்முயிரி னுள்வளர்த்த
வண்ண விளக்கிஃது
மடியத் திருவுளமோ?

3. ஓராயிர வருட
மோய்ந்து கிடந்தபின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ?

4. தர்மமே வெல்லுமெனுஞ்
சான்றோர் சொற் பொய்யாமோ?
கர்ம விளைவுகள் யாங்
கண்டதெல்லாம் போதாதோ?

5. மேலோர்கள் வெஞ்சிறையில்
வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில்
நோவதுவுங் காண்கிலையோ?

6. எண்ணற்ற நல்லோ
ரிதயம் புழுங்கியிரு
கண்ணற்ற சேய்போற்
கலங்குவதுங் காண்கிலேயோ ?

7. மாதரையு மக்களையும்
வன்கண்மை யாற்பிரிந்து
காத லிளைஞர்
கருத் தழிதல் காணுயோ ?

8. எந்தாய் நீ தந்த
இயற்பொருளெ லாமிழந்து
நொந்தார்க்கு நீயன்றி
நோவழிப்பார் யாருளரே ?

9. இன்பச் சுதந்திர நின்
இன்னருளாற் பெற்ற தன்றோ ?
அன்பற்ற மாக்கள்
அதைப் பறித்தாற் காவாயோ ?

10. வானமழை யில்லையென்றால்
வாழ்வுண்டோ ? எந்தை சுயா-
தீனமெமக் கில்லை யென்றால்
தீனரெது செய்வோமே ?

11. நெஞ்சகத்தே பொய்யின்றி
நேர்ந்ததெலா நீ தருவாய்
வஞ்சகமோ எங்கள்
மனத்தூய்மை காணுயோ ?

12. பொய்க்கோ வுடலும்
பொருளுயிரும் வாட்டுகிறோம்?
பொய்க்கோ தீராது
புலம்பித் துடிப்பதுமே?

13. நின்பொருட்டு நின்னருளால்
நின்னுரிமை யாங் கேட்டால்
என்பொருட்டு நீ தான்
இரங்கா திருப்பதுவே?

14. இன்று புதிதா
யிரக்கின்றோமோ? முன்னோர்
அன்று கொடு வாழ்ந்த
அறுமையெலா மோராயோ?

15. நீயும் அறமு
நிலைத்திருத்தல் மெய்யானல்
ஓயுமுன ரெங்களுக்கிவ்
வோர்வர நீ நல்குதியே.

---

35. சுதந்திர தேவியின் துதி

விருத்தம்

1. இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திழிவுற்றாலும்

விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட்டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.

2. நின்னருள் பெற்றிலாதார்
நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத் துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

3. தேவி! நின்னொளி பெறாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்திலாதார்?

4. ஒழிவறு நோயிற் சாவார்
ஊக்கமொன் றறிய மாட்டார்
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையி னிற்பார்

இழிவறு வாழ்க்கை தேரார்
கனவினு மின்பங் காணார்,
அழிவறு பெருமை நல்கும்
அன்னை, நின்னருள் பெறாதார்.

வேறு

5. தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்
தாவியும் தம தன்பு மளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினுந்
தாவில் வானுல கென்னத் தகுவதே.

6. அம்மை யுன்ற னருமை யறிகிலார்
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்
இம்மை யின்பங்க ளெய்து பொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே.

7. மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புது நிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும் நின்
பேற்றி னைப்பெறு வோமெனல் பேணினர்.

8. அன்ன தன்மை கொள் நின்னை யடியனேன்
என்ன கூறி யிசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்.

9. பேர றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை, துயர், மிடி யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமுதே! நினை வேண்டுவேன்.

36. சுதந்திரப் பள்ளு

(பள்ளர் களியாட்டம்)

இராகம்—வராளி. தாளம்—ஆதி

பல்லவி

ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
(ஆடுவோமே)

சரணங்கள்

1. பார்ப்பானை ஐயரென்ற
காலமும் போச்சே—வெள்ளைப்
பரங்கியைத் துரையென்ற
காலமும் போச்சே—பிச்சை
ஏற்பாரைப் பணிகின்ற
காலமும் போச்சே—நம்மை
ஏய்ப்போருக் கேவல் செய்யுங்
காலமும் போச்சே. (ஆடுவோமே)

2. எங்கும் சுதந்திர
மென்பதே பேச்சு—நாம்
எல்லோருஞ் சமமென்ப
துறுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி
யூதுவோமே—இதைத்
தரணிக் கெல் லாமெடுத்
தோதுவோமே. (ஆடுவோமே)

3. எல்லோரு மொன்றென்னுங்
 காலம் வந்ததே—பொய்யும்
ஏமாற்றுந் தொலைகின்ற
 காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியரென்னும்
 காலம் வந்ததே—கெட்ட
நயவஞ்சக் காரருக்கு
 நாசம் வந்ததே. (ஆடுவோமே)

4. உழவுக்குந் தொழிலுக்கும்
 வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை
 நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி
 மாய மாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம்
 ஓய மாட்டோம். (ஆடுவோமே)

5. நாமிருக்கு நாடு நம
 தென்ப தறிந்தோம்—இது
நமக்கே யுரிமையா
 மென்ப தறிந்தோம்—இந்தப்
பூமியி லெவர்க்கு மினி
 அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே யடிமை
 செய்து வாழ்வோம். (ஆடுவோமே)

37. கிருஷ்ணன்மீது ஸ்துதி

1. வேதவானில் விளங்கி "அறஞ் செய்மின்,
சாதல் நேரினுஞ் சத்தியம் பூணுமின்,
தீதகற்றுமின்" என்று திசையெலாம்
மோத நித்தம் இடித்து முழங்கியே.

2. உண்ணுஞ் சாதிக் குறக்கமும் சாவுமே
நண்ணு றுவண நன்கு புரந்திடும
எண்ண ரும்புகழ்க் கீதையெனச் சொலும்
பண்ண மிழ்தத் தருள்மழை பாலித்தே,

3. எங்க ளாரிய பூமியெனும் பயிர்
மங்க ளம்பெற நித்தலும் வாழ்விக்கும்
துங்க முற்ற துணைமுகி லேமலர்ச்
செங்க ணுய்நின் பதமலர் சிந்திப்பாம்.

4. வீரர் தெய்வதம் கர்ம விளக்குநற்
பார தர்செய் தவத்தின் பயனெனும்
தார விர்ந்த தடம்புயப் பார்த்தனோர்
கார ணம்மெனக் கொண்டு கடவுணீ,

5. நின்னை நம்பி நிலத்திடை யென்றுமே
மன்னு பாரத மாண்குலம் யாவிற்கும்
உன்னுங் காலை உயர்துணை யாகவே
சொன்ன சொல்லை யுயிரிடைச் சூடுவோம்.

6. ஐய கேளினி யோர்சொல், அடியர்யாம்
உய்ய நின்மொழி பற்றி யொழுகியே
மைய றும்புகழ் வாழ்க்கை பெறற்கெனச்
செய்யும் செய்கையி னின்னருள் சேர்ப்பையால்.

7. ஒப்பிலாத உயர் வொடு கல்வியும்
எய்ப்பில் வீரமும் இப்புவி யாட்சியும்
தப்பிலாத தருமமுங் கொண்டு யாம்
அப்ப னேநின் னடிபணிந் துய்வமால்.

8. மற்று நீயிந்த வாழ்வு மறுப்பையேல்
சற்று நேரத்து ளெம்முயிர் சாய்த்தருள்
கொற்ற வாநின் குவலய மீதினில்
வெற்று வாழ்க்கை விரும்பி யழிகலேம்.

9. நின்றன் மாமர பில்வந்து நீசராய்ப்
பொன்றல் வேண்டிலம் பொற்கழ லாணைகாண்
இன்றிங் கெம்மை யதம்புரி யில்லையேல்
வெற்றி யும்புக ழுந்தரல் வேண்டுமே.

38. ஸ்ரீகிருஷ்ண ஸ்தோத்திரம்

கவிகள்

ராகம்—கமாஸ்—தாளம்—ஆதி

1. என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னை கைவிலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

அன்றொரு பாரத மாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னருளன்றோ?
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ?

2. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிடலாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமை யில்லாயோ?
ஆரிய நீயுநின் அறமறந் தாயோ?
வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே?
வீர சிகாமணி, ஆரியர் கோனே!

39. விடுதலை

(பிலஹரி)

விடுதலை! விடுதலை! விடுதலை!

1. பறையருக்கு மிங்கு தீயர்
புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு
மறவருக்கும் விடுதலை;
திறமைகொண்ட தீமையற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்தகல்வி ஞானமெய்தி
வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழையென்றும் அடிமையென்றும்
 எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப
 திந்தியாவில் இல்லையே ;
வாழி கல்வி செல்வ மெய்தி
 மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொரு நிகர்
 ஸமானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர் தம்மை யிழிவுசெய்யு
 மடமையைக் கொளுத்துவோம் ;
வையவாழ்வு தன்னிலெந்த
 வகையினும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி
 ஆண்களோடு பெண்களும்
ஸரி நிகர் ஸமானமாக
 வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

---

40. பாரத ஸமுதாயம்

ராகம்—பியாக்—தாளம்—திஸ்ர ஏகதாளம்.

பல்லவி

பாரத ஸமுதாயம் வாழ்கவே—வாழ்க வாழ்க
பாரத ஸமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய (பாரத)

பாரத ஸமுதாயம்

அனுபல்லவி

முப்பது கோடி ஜனங்களின் ஸங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத ஸமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை—வாழ்க (பாரத)

சரணங்கள்

1. மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்க மினி யுண்டோ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை யினி யுண்டோ?—புலனில்
வாழ்க்கை யினி யுண்டோ?—நம்மி லந்த
வாழ்க்கை யினி யுண்டோ?
இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு.
கனியுங் கிழங்குந் தான்யங்களும்
கணக்கின்றித் தரு நாடு—இது
கணக்கின்றித் தரு நாடு—நித்த நித்தம்
கணக்கின்றித் தரு நாடு—வாழ்க (பாரத)

2. இனியொரு விதி செய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை யழித்திடுவோம்—வாழ்க (பாரத)

3. "எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்"
என் றுரைத்தான் கண்ணபெருமான் ;
எல்லாரு மமரநிலை யெய்து நன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—வாழ்க. (பாரத)

4. எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்
எல்லாரு மோர் நிறை எல்லாரு மோர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க (பாரத)

---

41. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை

(நொண்டிச்சிந்து)

1. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார்—இந்த
மரத்தி லென்பார் ; அந்தக் குளத்திலென்பார்,
துஞ்சுது முகட்டி லென்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்.(நெஞ்சு)

2\. மந்திரவாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்திலே மனக் கிலிபிடிப்பார்;
யந்திர சூனியங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே—ஜனம்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென் றெண்ணி நெஞ்ச மயர்வார்.
(நெஞ்சு)

3\. சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொரு வன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலெவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந்தெழுந்து நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போ லேங்கி நடப்பார்.
(நெஞ்சு)

4\. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடி யென்றால் அது பெரிதாமோ?
ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்றுமகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார். (நெஞ்சு)

5. சாத்திரங்களொன்றுங் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும்வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்ருயிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்;
தோத்திரங்கள் சொல்லியவர்தாம்—தமைச்
சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்;
ஆத்திரங் கொண்டேயிவன் சைவன்—இவன்
அரிபக்தனென்று பெருஞ் சண்டையிடுவார்.
(நெஞ்சு)

6. நெஞ்சு பொறுக்குதிலையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே
கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்து
துஞ்சி மடிகின்ருரே—இவர்
துயர்களைத் தீர்க்க வோர் வழியிலையே. (நெஞ்சு)

7. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்போல்—பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்றவிலங்குகள்போலவாழ்வார் (நெஞ்சு)

42. நிகழ்கின்ற ஹிந்துஸ்தானமும் வருகின்ற ஹிந்துஸ்தானமும்

போகின்ற பாரதத்தை சபித்தல்

1. வலிமை யற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
பொலிவிலா முகத்தினாய் போ போ போ
பொறி யிழந்த விழியினாய் போ போ போ
ஒலி யிழந்த குரலினாய் போ போ போ
ஒளி யிழந்த மேனியாய் போ போ போ
கிலி பிடித்த நெஞ்சினாய் போ போ போ
கீழ்மை யென்றும் வேண்டுவாய் போ போ போ

2. இன்று பாரதத்திடை நாய் போலே
ஏற்ற மின்றி வாழுவாய் போ போ போ
நன்று கூறி லஞ்சுவாய் போ போ போ
நாணிலாது கெஞ்சுவாய் போ போ போ
சென்று போன பொய் யெலாம் மெய்யாகச்
சிந்தை கொண்டு போற்றுவாய் போ போ போ
வென்று நிற்கும் மெய்யெலாம் பொய்யாக
விழி மயங்கி நோக்குவாய் போ போ போ

3. வேறு வேறு பாஷைகள்—கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ
நூறு நூல்கள் போற்றுவாய்—மெய்கூறும்
நூலி லொத் தியல்கிலாய் போ போ போ

மாறுபட்ட வாதமே ஐந்நூறு
வாயில் நீள ஓதுவாய் போ போ போ
சேறு பட்ட நாற்றமும்—தூறுஞ் சேர்
சிறிய வீடு கட்டுவாய் போ போ போ
4. ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ
தருமமொன்றி யற்றிலாய் போ போ போ
நீதி நூறு சொல்லுவாய்—கா சொன்று
நீட்டினால் வணங்குவாய் போ போ போ
தீது செய்வ தஞ்சிலாய்—நின் முன்னே
தீமை நிற்கி லோடுவாய் போ போ போ
சோதி மிக்க மணியிலே—காலத்தால்
சூழ்ந்த மாசு போன்றனை போ போ போ

வருகின்ற பாரதத்தை வாழ்த்தல்

1. ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களி படைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்டே தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண் டிரங்குவாய் வா வா வா
ஏறு போல் நடையினாய் வா வா வா
2. மெய்மை கொண்ட நூலையே—அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா
பொய்மை கூற லஞ்சுவாய் வா வா வா
பொய்மை நூல்க ளெற்றுவாய் வா வா வா

நொய்மை யற்ற சிந்தையாம் வா வா வா
நோய்களற்ற உடலினாய் வா வா வா
தெய்வ சாப நீங்கவே—நாங்கள் சீர்த்
தேசமீது தோன்றுவாய் வா வா வா

3. இளைய பார தத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே—நின்றேறும்
உதயஞாயி றொப்பவே வா வா வா
கலை யிழந்த நாட்டிலே—முன்போலே
கலை சிறக்க வந்தனை வா வா வா
விலையு மாண்பு யாவையும்—பார்த்தன் போல்
விழியினால் விளக்குவாய் வா வா வா

4. வெற்றி கொண்ட கையினால் வா வா வா
விநய நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர் முகத்தினாய் வா வா வா
கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக ளுய்யவே—நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வா வா வா

---

43. பிஜித் தீவிலே ஹிந்து ஸ்திரீகள்

ஹரிகாம்போதி ஜன்யம்

(ராகம்-ஸைந்தவி, திஸ்ரசாப்பு தாளம்)

பல்லவி

கரும்புத் தோட்டத்திலே—ஆ
கரும்புத் தோட்டத்திலே.

சரணங்கள்

1. கரும்புத் தோட்டத்திலே—அவர்
கால்களும் கைகளும் சோர்ந்து விழும்படி
வருந்துகின்றனரே—ஹிந்து
மாதர் தன் னெஞ்சு கொதித்துக் கொதித்துமெய்
சுருங்குகின்றனரே—அவர்
துன்பத்தை நீக்க வழியில்லை யோவொரு
மருந்திதற் கிலையோ—செக்கு
மாடுகள் போலுழைத் தேங்குகின் றாரந்தக்
கரும்புத் தோட்டத்திலே.

2. பெண்ணென்று சொல்லிடிலோ—ஒரு
பேயுமிரங்கு மென்பார் தெய்வமே—நின
தெண்ண மிரங்காதோ—அந்த
ஏழைக ளங்கு சொரியுங் கண்ணீர் வெறும்

மண்ணிற் கலந்திடுமோ—தெற்கு
மாகட லுக்கு நடுவினிலே யங்கொர்
கண்ணற்ற தீவினிலே—தனிக்
காட்டினிற் பெண்கள் புழுங்குகின்ரு ரந்தக்
கரும்புத் தோட்டத்திலே.

3. நாட்டை நினைப்பாரோ—எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே யன்னை
வீட்டை நினைப்பாரோ—அவர்
விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்
கேட்டிருப்பாய் காற்றே—துன்பக்
கேணியிலே யெங்கள் பெண்க ளழுதசொல்
மீட்டு முரையாயோ—அவர்
விம்மி யழவுந் திறங்கெட்டுப் போயினர்.
கரும்புத் தோட்டத்திலே.

4. நெஞ்சங் குமுறுகிருர்—கற்பு
நீங்கிடச் செய்யுங் கொடுமையிலே யந்தப்
பஞ்சை மகளிரெல்லாம்—துன்பப்
பட்டு மடிந்து மடிந்து மடிந்தொரு
தஞ்சமு மில்லாதே—அவர்
சாகும் வழக்கத்தை இந்தக் கணத்தினில்
மிஞ்ச விடலாமோ—ஹே!
வீர கராளி, சாமுண்டி, காளீ!
கரும்புத் தோட்டத்திலே.

44. மாஜினியின் பிரதிக்ஞை

[மாஜினி என்ற இத்தாலி தேசத்து தேசாபிமானி தம்மால் ஸ்தாபிக்கப்பட்ட 'யௌவன இத்தாலி' என்ற சங்கத்திலே செய்து கொண்ட பிரதிக்ஞை.]

1. பேரருட் கடவுள் திருவடி யாணை,
பிறப்பளித் தெமையெலாம் புரக்கும்
தாரணி விளக்காம் என்னரு நாட்டின்
தவப்பெய ரதன் மிசை யாணை.
பாரவெந் துயர்கள் தாய்த் திரு நாட்டின்
பணிக்கெனப் பல்வித துழன்ற
வீரர் நந்நாடு வாழ்கென வீழ்ந்த
விழுமியோர் திருப்பெய ராணை.

2. ஈசனிங் கெனக்கு மென்னுடன் பிறந்தோர்
யாவர்க்கு மியற்கையி னளித்த
தேசமின் புறுவான் எனக்கவன் பணித்த
சீருய ரறங்களி னாணை.
மாசறு மென்நற் றாயினைப் பயந்தென்
வழிக்கெலாம் உறையுளாம் நாட்டின்
ஆசையிங் கெவர்க்கு மியற்கையா மன்றோ?
அத்தகை யன்பின்மீ தாணை.

3. தீயன புரிதல், முறைதவி ருடைமை,
செம்மை தீர் அரசியல், அநீதி
ஆயவற் றென்னெஞ் சியற்கையி னெய்தும்
அரும்பகை யதன் மிசை யாணை.

தேயமொன் றற்றேன், நற்குடிக் குரிய
உரிமைகள் சிறிதெனு மில்லேன்,
தூயசீ ருடைத்தாம் சுதந்திரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்.

4. மற்றை நாட்டவர் முன் னின்றிடும் போழ்து
மண்டுமென் வெட்கத்தினாணை.
முற்றியவீடு பெறற்கெனப் படைப்புற்
றச் செயல் முடித்திட வலிமை
அற்றதா மறுகும் என்னுயிர்க் கதனி
லார்ந்தபே ராவலினாணை.
நற்றவம் புரியப் பிறந்ததாயினு மிந்
நலனறு மடிமையின் குணத்தால்

5. வலியிழுந் திருக்கு மென்னுயிர்க் கதன் கண்
வளர்ந்திடும் ஆசை மீதாணை.
மலிவுறு சிறப்பின் எம்முடை முன்னோர்
மாண்பதன் நினைவின்மீ தாணை.
மெலிவுட னிந்நாள் யாங்கள் வீழ்ந்திருக்கும்
வீழ்ச்சியி னுணர்ச்சிமீ தாணை.
பொலிவுறு புதல்வர் தூக்கினி லிறந்தும்
புன்சிறைக் களத்திடை யழிந்தும்

6. வேற்று நாடுகளில் அவர் துரத்துண்டும்
மெய்குலைந் திறந்துமே படுதல்
ஆற்றகிலாராய் எம்மரு நாட்டின்
அன்னைமா ரழுங் கணீ ராணை,

மாற்றலரெங்கள் கோடியர்க் கிழைக்கும்
வகுக்கொணுத் துயர்களி ஞணே.
ஏற்ற இவ்வாணை யனைத்துமேற் கொண்டே
யான் செயுஞ் சபதங்கள் இவையே.

7. கடவுளிங் நாட்டிற் கீந்ததோர் புனிதக்
கட்டளை தன்னினும், அதனைத்
திடனுற நிறுவ முயலுதல் மற்றித்
தேசத்தே பிறந்தவர்க்கெல்லாம்
உடனுறு கடமை யாகுமென்பதினும்
ஊன்றிய நம்புதல் கொண்டும்,
தடநில மிசையோர் சாதியை இறைவன்
சமைகெனப் பணிப்பனேல் அதுதான்.

8. சமைதலுக் குரிய திறமையும் அதற்குத்
தந்துள னென்பதை யறிந்தும்,
அமையுமத் திறமை ஜனங்களைச்சாரும்
அன்னவர் தமக்கெனத் தாமே
தமையல தெவர்கள் துணையு மில்லாது
தம்மருந் திறமையைச் செலுத்தல்
சுமையெனப் பொறுப்பின் செயத்தினுக்கதுவே
சூழ்ச்சியா மென்பதை யறிந்தும்,

9. கருமமுஞ் சொந்த நலத்தினைச் சிறிதும்
கருதிடா தளித்தலுந் தானே
தருமமா மென்றும், ஒற்றுமையோடு
தளர்விலாச் சிந்தனை கொளலே

பெருமைகொள் வலியா மென்றுமே மனத்திற
பெயர்ந்திட உறுதிமேற்கொண்டும்,
அருமைசால் சபத மிவை புரிகின்றேன்
ஆணைக ளனைத்து முற்கொண்டே.

10. என்னுடனொத்த தருமத்தை யேற்றார்
இயைந்த இவ் 'வாலிபர் சபை' க்கே
தன்னுடல், பொருளும், ஆவியுமெல்லாம்
தத்தமா வழங்கினேன். எங்கள்
பொன்னுயர் நாட்டை யொற்றுமையுடைத்தராய்ச்
சுதந்திரம் பூண்டது வாகி
இன்னுமோர் நாட்டின் சார்விலதாகிக்
குடியர சியன்றதா யிலக.

11. இவருடன் யானு மிணங்கியே யென்று
மிதுவலாற் பிறதொழி லிலனாய்த்
தவமறு முயற்சி செய்திடக் கடவேன்.
சந்ததஞ் சொல்லினால், எழுத்தால்,
அவமறு செய்கை யதனினால், இயலும்
அளவெலாம், எம்மவ ரிந்த
நவமுறு சபையி னொரு பெருங் கருத்தை
நன்கிதின் அறிந்திடப் புரிவேன்.

12. உயரு மிந்நோக்க நிறைவுற ' இணக்கம் '
ஒன்றுதான் மார்க்கமென்பதுவும்,
செயம்நிலையாகச் செய்திடற் கறமே
சிறந்ததோர் மார்க்க மென்பதுவும்,

பெயர்வற எங்கள் நாட்டினர் மனதிற்
பேணுமா றியற்றிடக் கடவேன்;
அயலொரு சபையி லின்றுதோ றென்றும்
அமைந்திடா திருந்திடக் கடவேன்.

13. எங்கள் நாட்டொருமை யென்னுநெடுங் குறிக்கும்
இச்சபைத் தலைவரா யிருப்போர்
தங்களாக் கினைக ளனைத் தையும் பணிந்து
தலைக்கொளற் கென்றுமே கடவேன்;
இங்கெனதாவி பாய்ந்திடு மேனு
மிவர்பணி வெளியிடா திருப்பேன்;
துங்கமார் செயலாற் போதனை யாலும்
இயன்றிடுந் துணையிவர்க் களிப்பேன்.

14. இன்று மெந்நாளு மிவை செயத்தவறேன்;
மெய்யிது, மெய்யிது; இவற்றை
என்றுமே தவறி யிழைப்பனே லென்னை
ஈசனார் நாசமே புரிக;
அன்றியுமக்கள் வெறுத்தெனை யிகழ்க;
அசத்தியப் பாதகஞ் சூழ்க;
நின்ற தீ யெழுவாய் நரகத்தின் வீழ்ந்து
நித்தம் யா னுழலுக மன்னோ!

15. பேசி நின்ற பெரும்பிர திக்கினை
மாசிலாது நிறைவுறும் வண்ணமே
ஆசி கூறி யருளுக ஏழையேற்
கீச னென்று மிதயத் திலகியே.

---

45. பெல்ஜியம் நாட்டிற்கு வாழ்த்து

1. அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்; அன்னியன்
வலியனாகி
மறத்தினால் வந்து செய்த வன்மையைப்
பொறுத்தல் செய்யாய்
முறத்தினாற் புலியைக் காக்கு மொய்வரைக்
குறப்பெண் போலத்
திறத்தினால் எளியையாகிச் செய்கையால்
உயர்ந்து நின்றாய்.

2. வண்மையால் வீழ்ந்து விட்டாய்; வாரி
போற் பகைவன் சேனை
திண்மையோ டடர்க்கும்போதில் சிந்தனை
மெலித லின்றி
ஒண்மை சேர் புகழே மேலென் றுளத்திலே
உறுதி கொண்டாய்
உண்மைதேர் கோல நாட்டார்
உரிமையைக் காத்து நின்றாய்.

3. மானத்தால் வீழ்ந்துவிட்டாய்; மதிப்பிலாப்
பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமை கொண்ட வலிமைதான்
உடையனேனும்

ஊனத்தால் உள்ளமஞ்சி ஒதுங்கிட—
    மனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோ மென்றே அவன் வழி
    யெதிர்த்து நின்ருய்.

4. வீரத்தால் வீழ்ந்து விட்டாய் ; மேல்வரை
    யுருளுங் காலை
ஓரத்தே யொதுங்கித் தன்னை யொளித்திட
    மனமொவ் வாமல்
பாரத்தை யெளிதாக் கொண்டாய், பாம்பினைப்
    புழுவே யென்ருய்
நேரத்தே பகைவன் றன்னை 'நில்' லென
    முனைந்து நின்ருய்.

5. துணிவினல் வீழ்ந்துவிட்டாய் ; தொகையிலாப்
    படைகளோடும்
பிணிவளர் செருக்கிஞேடும் பெரும்பகை
    யெதிர்த்தபோது
பணிவது கருதமாட்டாய், பதுங்குதல்
    பயனென் றெண்ணுய்
தணிவதை நினைக்கமாட்டாய், 'நில்,
    லெனத் தடுத்தல் செய்தாய்.

6. வெருளுதலறிவென் றெண்ணுய் ; விபத்தையோர்
    பொருட்டாக் கொள்ளாய் ;
சுருளலை வெள்ளம் போலத் தொகையிலாப்
    படைகள் கொண்டே

மருளுறு பகைவர் வேந்தன் வலிமையாற்
புகுந்த வேளை
"உருளுக தலைகள், மானமோங்குக"என்
றெதிர்த்து நின்றாய்.

7. யாருக்கே பகை யென்றாலும் யார்மிசை
யிவன் சென்றாலும்
ஊருக்கு ளெல்லை தாண்டி யுத்தர
வெண்ணிடாமல்
போருக்குக் கோலம் பூண்டு புகுந்தவன்
செருக்குக் காட்டை.
வேருக்கு மிடமில்லாமல் வெட்டுவே
னென்று நின்றாய்.

8. வேள்வியில் வீழ்வதெல்லாம் வீரமும்
புகழுமிக்கு
மீள்வதுண் டுலகிற் கென்றே வேதங்கள்
விதிக்கு மென்பர்
ஆள்வினை செய்யும் போதில், அறத்திலே
யிளைததுு வீழ்ந்தார்
கேள்வியுண் டுடனே மீளக் கிளர்ச்சி கொண
டுயிர்த்து வாழ்தல்.

9. விளக்கொளி மழுங்கிப் போக வெயிலொளி
தோன்றும் மட்டும்
களக்கமா ரிருளின் மூழ்குங் கனகமா
ளிகையு முண்டாம்

அளக்கருந் தீதுற்றாலும் அச்சமே
யுளத்துக் கொள்ளார்
துளக்கற வோங்கி நிற்பர் துயருண்டோ
துணிவுள்ளோர்க்கே?

---

46. புதிய ருஷியா

ஜார் சக்கரவர்த்தியின் வீழ்ச்சி

1. மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி;
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்:
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண் புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர், புதுமை காணீர்!

2. இரணியன்போ லரசாண்டான் கொடுங்கோலன்
ஜாரெனும்பே ரிசைந்த பாவி.
சரணின்றித் தவித்திட்டார் நல்லோரும்
சான்றோரும்; தருமந்தன்னைத்
திரணமெனக் கருதிவிட்டான் ஜார்மூடன்;
பொய் சூது தீமையெல்லாம்
அரணியத்திற் பாம்புகள் போல் மலிந்துவளர்ந்
தோங்கினவே யந்த நாட்டில்.

3. உழுதுவிதைத் தறுப்பாருக் குணவில்லை ;
பிணிகள் பலவுண்டு ; பொய்யைத்
தொழுதடிமை செய்வார்க்குச் செல்வங்க
ளுண்டுண்மை சொல்வோர்க் கெல்லாம்
எழுதரிய பெரும் கொடுமைச் சிறையுண்டு
தூக்குண்டே யிறப்பதுண்டு ;
முழுதுமொரு பேய் வனமாஞ் சிவேரியிலே
ஆவிகெட முடிவதுண்டு.

4. இம்மென்றால் சிறைவாசம் ; ஏனென்றால்
வனவாசம் ; இவ்வாறங்கே
செம்மையெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்த்த போதில்,
அம்மைமனங் கனிந்திட்டாள் ; அடிபரவி
உண்மை சொலும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடு நல் விழியாலே
நோக்கினாள் ; முடிந்தான் காலன்.

5. இமயமலை வீழ்ந்ததுபோல் வீழ்ந்துவிட்டான்
ஜாரரசன் ; இவனைச் சூழ்ந்து
சமயமுள படிக்கெல்லாம் பொய்கூறி
அறங்கொன்று சதிகள் செய்த
சுமடர் சடசடவென்று சரிந்திட்டார்,
புயற் காற்றுச் சூறை தன்னில்
திமு திமென மரம்விழுந்து காடெல்லாம்
விறகான செய்தி போலே.

6. குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்; குடியரசென்
றுலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தலையில்லை யாருமிப்போ
தடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர்போலே கலி விழுந்தான்.
கிருத யுகம் எழுக மாதோ!

47. பெண்கள் விடுதலைக் கும்மி

காப்பு

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக்களிப்பொடு நாம் பாடக்
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந்தொளிர் தெய்வநற் காப்பாமே.

1. கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி. (கும்மி)

2. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார் [மென்ற
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ-
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

3. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி. (கும்மி)

4. நல்ல விலைகொண்டு நாயை விற்பா ரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?
கொல்லத் துணிவின்றி நன்மையு மங்கிலை
கூட்டி வைத்தார் பழி கூட்டி விட்டார். (கும்மி)

5. கற்பு நிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கக்ஷிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

6. பட்டங்க ளாள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி. (கும்மி)

7. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடுவோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம். (கும்மி)

8. காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதர றங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி. (கும்மி)

48. புதுமைப் பெண்

1. போற்றி போற்றியோ ராயிரம் போற்றி! நின்
பொன்னடிக்குப்பல் லாயிரம் போற்றி காண்!
சேற்றிலே புதிதாக முளைத்ததோர்
செய்ய தாமரைத் தேமலர் போலொளி
தோற்றி நின்றனை பாரத நாட்டிலே
துன்ப நீக்குஞ் சுந்தர பேரிகை
சாற்றி வந்தனை மாதரசே யெங்கள்
சாதி செய்த தவப்பயன் வாழி நீ!

2. மாதர்க் குண்டு சுதந்திர மென்று நின்
வண் மலர்த்திரு வாயின் மொழிந்தசொல்
நாதந் தானது நாரதர் வீணையோ?
நம்பிரான் கண்ணன் வேய்ங்குழ லின்பமோ?
வேதம் பொன்னுருக் கன்னிகை யாகியே
மேன்மைசெய்தெமைக் காத்திடச்சொல்வதோ?
சாதல் மூத்தல் கெடுக்கு மமிழ்தமோ?
தையல் வாழ்க பல் லாண்டுபல்லாண் டிங்கே!

3. அறிவு கொண்ட மனித வுயிர்களை
அடிமை யாக்க முயல்பவர் பித்தராம்
நெறிகள் யாவினு மேம்பட்டு மானிடர்
நேர்மை கொண்டுயர் தேவர்களாதற்கே
சிறிய தொண்டுகள் தீர்த்தடிமைச் சுருள்
தீயி லிட்டுப் பொசுக்கிட வேண்டுமாம்
நறிய பொன்மலர் மென் சிறு வாயினால்
நங்கை கூறு நவீனங்கள் கேட்டிரோ!

4. ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கியிவ் வையந் தழைக்குமாம்
பூணு நல்லறத் தோடிங்கு பெண்ணுருப்
போந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்
நாணு மச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்
பெண்மைத் தெய்வத்தின் பேச்சுகள் கேட்டீரோ;

5. நிலத்தின் தன்மை பயிர்க்குள தாகுமாம்
நீசத் தொண்டு மடமையுங் கொண்டதாய்
தலத்தில் மாண்புயர் மக்களைப் பெற்றிடல்
சாலவே யரி தாவதோர் செய்தியாம்
குலத்து மாதர்க்குக் கற்பியல் பாகுமாம்
கொடுமை செய்து மறிவை யழித்துமந்
நலத்தைக் காக்க விரும்புதல் தீமையாம்
நங்கை கூறும் வியப்புகள் கேட்டீரோ!

6. புதுமைப்பெண்ணிவள் சொற்களுஞ்செய்கையும்
பொய்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்
சதுமறைப்படி மாந்த ரிருந்த நாள்
தன்னிலே பொதுவான வழக்கமாம்
மதுரத் தேமொழி மங்கைய ருண்மைதேர்
மாதவப் பெரி யோருட னொப்புற்றே
முதுமைக் காலத்தில் வேதங்கள் பேசிய
முறைமை மாறிடக் கேடு விளைந்ததாம்.

7. நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புவதில்லையாம்
அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில்
அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை
உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணற மாகுமாம்
உதய கன்னி யுரைப்பது கேட்டிரோ!

8. உலக வாழ்க்கையி நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவி லொழிப்பராம்.

9. சாத்திரங்கள் பல பல கற்பராம்
சவுரியங்கள் பல பல செய்வராம்
மூத்த பொய்மைகள் யாவு மழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பராம்
ஏத்தி யாண்மக்கள் போற்றிட வாழ்வராம்
இளைய நங்கையி னெண்ணங்கள் கேட்டிரோ!

10. போற்றி, போற்றி, ஜயஜய போற்றியிப்
புதுமைப் பெண்ணொளி வாழி பல் லாண்டிங்கே
மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை யமரர்களாக்கவே
ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை நல்
லருளினா லொரு கன்னிகை யாகியே
தேற்றி யுண்மைகள் கூறிட வந்திட்டாள்
செல்வம் யாவினு மேற்செல்வ மெய்தினோம்.

---

49. பெண்மை

1. பெண்மை வாழ்கென்று கூத்திடு வோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா
தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் ஸதியென்ற நாமமும்.

2. அன்பு வாழ்கென் றமைதியி லாடுவோம்
ஆசைக் காதலைக் கைகொட்டி வாழ்த்துவோம்
துன்பந் தீர்வது பெண்மையி னாலடா
சூரப் பிள்ளைகள் தாயென்று போற்றுவோம்.

3. வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா
மானஞ் சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலி யழிப்பது பெண்க ளறமடா
கைகள் கோத்துக் களித்துநின் றாடுவோம்.

4. பெண் ணறத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற் பிறகொரு தாழ்வில்லை;
கண்ணைக் காக்கு மிரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா.

5. சக்தி யென்ற மதுவையுண் போமடா
தாளங் கொட்டித் திசைகளதிரவே
ஓத்தி யல்வதொர் பாட்டுங் குழல்களும்
ஊர் வியக்கக் களித்துநின் றுடுவோம்.

6. உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்த்திடும்
உயிரினுக் குயிரா யின்ப மாகிடும்
உயிரி னும்மிந்தப் பெண்மை யினிதடா
ஊது கொம்புகள், ஆடு களிகொண்டே.

7. 'போற்றி தாய்' என்று தோள் கொட்டியாடுவீர்
புகழ்ச்சி கூறுவிர் காதற் கிளிகட்கே
நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே.

8. 'போற்றி தாய்' என்று தாளங்கள் கொட்டடா
'போற்றி தாய்' என்று பொற்குழ லூதடா
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே.

9. அன்ன மூட்டிய தெய்வமணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம்
கன்னத் தேமுத்தங் கொண்டு களிப்பினும்
கையைத் தள்ளும் பொற்கைகளைப் பாடுவோம்.

50. ஆங்கிலப் பயிற்சி

நெல்லை யூர்சென் றவ்வூணர் கலைத்திறன்
நேரு மாறெனை எந்தை பணித்தனன் ;
புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும், ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும், எந்தைதான்
அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
ஆரியர்க் கிங் கருவருப் பாவதை (1)

நரியு யிர்ச்சிறு சேவகர் தாதர்கள்
நாயெ னத்திரி யொற்றர் உணவினைப்
பெரிதெ னக்கொடு தம்முயிர் விற்றிடும்
பேடி யர்பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருது மிவ்வகை மாக்கள் பயின் றிடுங்
கலைப யில்கென வென்னை விடுத்தனன் ;
அருமை மிக்க மயிலைப் பிரிந்துமிவ்
வற்பர் கல்வியி னெஞ்சு பொருந்துமோ ? (2)

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்
அணிசெய் காவிய மாயிரங் கற்கினும்
ஆழ்ந்தி ருக்குங் கவியுளம் காண்கிலார்
வணிக மும்பொரு ளூலும் பிதற்றுவார்
வாழு நாட்டிற்பொ ருள்கெடல் கேட்டிலார்.
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லு வாரெட்டுணைப்பயன் கண்டிலார். (3)

கம்ப னென்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்
உம்பர் வானத்துக் கோளையு மீனையு
மோர்ந்த ளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்
நம்ப ருந்திற லோடொரு பாணினி
ஞால மீதிலி லக்கணங் கண்டதும்
இம்பர் வாழ்வி னிறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கர னேற்றமும் (4)

சேரன் தம்பி சிலம்பை யிசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்
பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்ததுந் தர்மம் வளர்த்ததும்
பேர ருட்சுடர் வாள்கொண் டசோகனார்
பிழை படாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீயகோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும் (5)

அன்ன யாவு மறிந்திலர் பாரதத்
தாங்கி லம்பயில் பள்ளியுட் போகுநர் ;
முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளி னிகழ்ச்சியும்
பின்னர் நாடுறு பெற்றியுந் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறிமற் றெங்க னுணர்த்துவேன்
இங்கி வர்க்கென துள்ள மெரிவதே ! (6)

சூதி லாத வுளத்தின னெந்தைதான்
சூழ்ந்தெ னக்கு நலஞ்செய னுடியே
ஏதிலர் தருங் கல்விப் படுகுழி
ஏறியுய்தற் கரிய கொடும்பிலம்
தீதியன்ற மயக்கமு மையமும்
செய்கை யாவினுமே யசிரத்தையும்
வாதும் பொம்மையுமென்ற விலங்கினம்
வாழும் வெங்குகைக் கென்னை வழங்கினன். (7)

ஐய ரென்றுந் துரையென்று மற்றெனக்
காங்கி லக்கலை யென்றொன் றுணர்த்திய
பொய்ய ருக்கிது கூறுவன் கேட்பிரேல் :
'பொழுதெ லாமுங்கள் பாடத்திற் போக்கினான்
மெய்ய யர்ந்து விழிகுழி யெய்திட
வீறி ழந்தென துள்ளநோய் தாங்கிட
ஐயம் விஞ்சிச் சுதந்திர நீங்கியென்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால். (8)

செலவு தந்தைக்கோ ராயிரஞ் சென்றது ;
தீதெ னக்குப் பல்லாயிரஞ் சேர்ந்தன ;
நலமொ ரெட்டுணை யுங்கண்டி லேனிதை
நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லுவேன்.
சிலமுன் செய்த வினைப்பயனாலுநந்
தேவி பாரதத் தன்னை யருளினும்
அலைவு றுத்துநும் பேரிருள் வீழ்ந்துநான்
அழிந்திடா தொருவாறு பிழைத்ததே.' (9)

51. நாட்டுக் கல்வி

(ஆங்கிலத்தில் ரவீந்திரநாதர் எழுதிய பாடலின்
மொழிபெயர்ப்பு)

1. விளக்கிலே திரி நன்கு சமைந்தது
மேவுவீர் இங்கு தீக் கொண்டு தோழரே!
களக்க முற்ற இருள் கடந் தேகுவார்
காலைச் சோதிக் கதிரவன் கோவிற்கே
துளக்கமுற்ற விண் மீனிடம் செல்லுவார்
தொகையில் சேர்ந்திட உம்மையும் கூவினர்.
களிப்பு மிஞ்சி ஒளியினைப் பண்டொரு
காலம் நீர்சென்று தேடிய தில்லையோ?

2. அன்று நுங்கள் கொடியினை முத்திட்டே
ஆசை யென்றவிண் மீன்ஒளிர் செய்ததே;
துன்று நள்ளிருள் மாலை மயக்கத்தால்
சோம்பி நீரும் வழிநடை பிந்தினீர்
நின் றவிந்தன நுங்கள் விளக்கெலாம்
நீங்கள் கண்ட கனுக்க ளெல்லாம் இசை
குன்றித் தீக்குறி தோன்றும் இராப்புட்கள்
கூவு மாறுத் திருந்தன காண்டிரோ.

3. இன்னு மிங்கிருள் கூடி யிருப்பினும்
ஏங்குகின்ற நரகத் துயிர்கள் போல்
இன்னு மிங்கு வனத்திடை காற்றுத்தான்
ஓங்கும் ஓதை இருந்திடும் ஆயினும்

முன்னைக் காலத்தி னின்றெழும் பேரொலி
முறை முறைபல ஊழியின் ஊடுற்றே
பின்னை இங்கு வந்தெய்திய பேரொலி
போல மந்திர வேதத்தின் பேரொலி.

4. "இருளை நீக்கி ஒளியினைக் காட்டுவாய்,
இறப்பை நீக்கி, அமிர்தத்தை ஊட்டுவாய்"
அருளும் இந்த மறையொலி வந்திங்கே
ஆழ்ந்த தூக்கத்தில் வீழ்ந்திருப்பீர் தமைத்
தெருள் உறுத்தவும் நீர் எழுகில்லிரோ?
தீயநாச உறக்கத்தில் வீழ்ந்த நீர்
மருளை நீக்கி அறிதிர் அறிதிரோ
வான் ஒளிக்கு மகா அர்இ யாம் என்றே.

52. தொழில்

1. இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே!
கடலில் மூழ்கிநன் முத்தெடுப்பீரே!
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!
பெரும்புகழ் நுமக் கேயிசைக் கின்றேன்
பிரமதேவன் கலையிங்கு நீரே!

2. மண் ணெடுத்துக் குடங்கள் செய்வீரே !
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே !
உண்ணக் காய்கனி தந்திடு வீரே !
உழுது நன்செய் பயிரிடுவீரே !
எண்ணெய், பால்நெய் கொணர்ந்திடு வீரே !
இழையை நூற்றுநல் லாடைசெய் வீரே.
விண்ணி னின்றெமை வானவர் காப்பார் !
மேவிப் பார்மிசைக் காப்பவர் நீரே !

3. பாட்டுஞ் செய்யுளுங் கோத்திடு வீரே !
பரத நாட்டியக் கூத்திடு வீரே !
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே !
நாட்டி லேயறம் கூட்டி வைப்பீரே !
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே !
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வ மாக விளங்குவிர் நீரே !

---

53. தமிழ்த் தாய்

தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்
(தாயுமானவர் ஆனந்தக்களிப்பு சந்தம்)

1. ஆதிசிவன் பெற்றுவிட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்திய னென்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்த—நிறை
மேவும் இலக்கணஞ் செய்து கொடுத்தான்

2. மூன்று குலத்தமிழ் மன்னர்—என்னை
மூண்டநல் லன்பொடு நித்தம் வளர்த்தார் ;
ஆன்ற மொழிகளினுள்ளே—உயர்
ஆரியத்திற்கு நிகரென வாழ்ந்தேன்.

3. கள்ளையுந் தீயையுஞ் சேர்த்து—நல்ல
காற்றையும் வான வெளியையுஞ் சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியஞ் செய்து கொடுத்தார்.

4. சாத்திரங் கள்பல தந்தார்—இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன் ;
நேத்திரங் கெட்டவன் காலன்—தன்முன்
நேர்ந்த தனைத்துந் துடைத்து முடிப்பான்.

5. நன்றென்றுந் தீதென்றும் பாரான்—முன்பு
நாடும் பொருள்கள் அனைத்தையும் வாரிச்
சென்றிடுங் காட்டுவெள் ளம்போல்—வையச்
சேர்க்கையனைத்தையுங் கொன்றுநடப்பான்.

6. கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசைமொழி யெல்லாம்
என்னென்ன வோபெய ருண்டு—பின்னர்
யாவும் அழிவுற் றிறந்தன கண்டீர்.

7. தந்தை அருள்வலி யாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலி யாலும்
இந்தக் கணமட்டுங் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சி யிருந்தான்.

8. இன்றொரு சொல்லினைக் கேட்டேன்!—இனி
ஏது செய்வேன்? என தாருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!

9. "புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.

10. சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்"

11. என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் [பீர்!
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்குசேர்ப்

12. தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலி யாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்.

54. தமிழ்

1. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்.
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

2. யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்!

3. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்;
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்.

4. உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போற் கலைப்பெருக்
கவிப்பெருக்கும் மேவு மாயின் [கும்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

---

55. செந்தமிழ் நாடு

1. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே—எங்கள்
(செந்தமிழ்)

2. வேதம் நிறைந்த தமிழ் நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ் நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

3. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

4. முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம்புறக் காக்குந் தமிழ் நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

5. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு (செந்தமிழ்)

6. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு. (செந்தமிழ்)

7. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென் றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

8. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு. (செந்தமிழ்)

9. விண்ணையிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு. (செந்தமிழ்)

10. சீனமிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

---

56. தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தான

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்ததனைத்து மளந்திடு
வண் மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே.

7. வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே.

57. புது வருஷம்

ஆசிரியப்பா

வாழிய செந்தமிழ்! வாழ்க நற் றமிழர்!
வாழிய பாரத மணித் திருநாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெல்லாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மற மடி வுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றுஞ்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந் தேயத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

ஜாதீய கீதம்

[பங்கிம் சந்திர சட்டோபாத்யாயர் வங்காளியில் இயற்றிய " வந்தே மாதரம் " கீதம்]

ஸுஜலாம், ஸுபலாம் மலயஜ ஶீதலாம்
ஸஸ்ய ஶ்யாமலாம் மாதரம் (வந்தே)

1. ஶுப்ர ஜ்யோத்ஸ்னா புலகித யாமினீம்
புல்ல குஸுமித த்ரும தள ஶோபினீம்
ஸுஹாஸினீம், ஸுமதுர பாஷிணீம்
ஸுகதாம், வரதாம், மாதரம். (வந்தே)

2. ஸப்த கோடி கண்ட கல்கல நிநாத கராலே
த்விஸப்த கோடி புஜைர் த்ருத கர கரவாலே
கே போலே, மா துமி அபலே
பஹுபல தாரிணீம், நமாமி தாரிணீம்
ரிபுதள வாரிணீம், மாதரம். (வந்தே)

3.. துமி வித்யா, துமி தர்ம,
துமி ஹ்ருதி, துமி மர்ம,
த்வம்ஹி ப்ராணா: சரீரே
பாஹுதே துமி மா சக்தி
ஹ்ருதயே துமி மா பக்தி
தொமா ரேயி ப்ரதிமா கடிமந்திரே மந்திரே.
(வந்தே)

4. த்வம்ஹி துர்கா தசப்ரஹரண தாரிணீ
கமலா கமலதல விஹாரிணீ
வாணீ வித்யா தாயினீ, நமாமி த்வாம். (வந்தே)

5. நமாமி, கமலாம், அமலாம், அதுலாம்,
ஸுஜலாம், ஸுபலாம் மாதரம்
ஶ்யாமலாம், ஸரலாம், ஸுஸ்மிதாம், பூஷிதாம்,
பரணீம், தரணீம், மாதரம். (வந்தே மாதரம்)

அநுபந்தம் 2.

பாடல் முதற் குறிப்பகராதி

		பக்கம்
அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்	...	87
அன்னியர் தமக்கடிமை யல்லவே	...	46
ஆடுவோமே-பள்ளுப் பாடுவோமே	...	67
ஆதிசிவன் பெற்றுவிட்டான்	...	104
இதந்தரு மனையி னீங்கி	...	64
இரும்பைக் காய்ச்சி	...	103
இனிய நீர்ப் பெருக்கினை	...	5
எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி	...	4
என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?	...	70
ஓய் திலகரே, நம்ம ஜாதிக் கடுக்குமோ	...	40
கரும்புத் தோட்டத்திலே	...	80
களக்க முறும் மார்லி நடம்	...	37
சிறந்து நின்ற சிந்தை யோடு	...	14
சுருதியு மரிய உபநிடதத்தின்	...	58
செந்தமிழ் நாடெனும் போதினிலே	...	108
சொந்த நாட்டிற் பரர்க்கடிமை	...	44
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்?	...	62
தாயின் மணிக்கொடி பாரீர்	...	28
தொண்டு செய்யு மடிமை	...	38
தொன்று நிகழ்ந்த தனைத்தும்	...	30
நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும்	...	7
நாட்டிலெங்குஞ் சுதந்திர வாஞ்சையை	...	43

தேசீய கீதங்கள்

		பக்கம்
நாடிழந்து மக்களை யு நல்லாளையும் பிரிந்து	...	48
நாமகட்குப் பெருந் தொண்டியற்றி	...	55
நாமென்ன செய்வோம், துணைவரே	...	42
நெஞ்சி லுரமு மின்றி ,	...	33
நெஞ்சுபொறுக்குதிலையே	...	74
நெல்லையூர் சென்றவ் வுணர் கலைத்திறன்	...	99
பச்சை மணிக்கிளியே	...	20
பாபேந்திரியஞ் செறுத்த	...	52
பாரத தேச மென்று பெயர் சொல்லுவார்	...	10
பாரத ஸமுதாயம் வாழ்கவே	...	72
பாருக்குள்ளே நல்ல நாடு	...	8
பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்	...	92
பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா	...	97
பேயவள் காணெங்க ளன்னை	...	32
பேரருட் கடவுள் திருவடி யாணை	...	82
பொழுது புலர்ந்தது	...	18
போற்றி போற்றி யோராயிரம் போற்றி	...	94
மன்னு மிமய மலையெங்கள் மலையே	...	12
மாகாளி பராசக்தி உருசிய நாட்டினின்	...	90
முன்னொளி லிராமபிரான்	...	50
முன்னை யிலங்கை அரக்கர் அழிய	...	16
யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்	...	107
வந்தே—மாதரம்—ஜய	...	3
வந்தே மாதர மென்போம்	...	1
வலிமை யற்ற தோளினாய் போ போ போ !	...	77
வாழ்க திலகன் நாமம் ! வாழ்க ! வாழ்கவே !	...	54

பாடல் முதற் குறிப்பகராதி

		பக்கம்
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி	...	111
வாழ்க நீ! எம்மான்	...	56
வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!	...	112
விடுதலை! விடுதலை! விடுதலை!	...	71
விண்ணகத்தே யிரவிதனை	...	47
விளக்கிலே திரி நன்கு சமைந்தது	...	102
வீர சுதந்திரம் வேண்டி நின்றார்	...	60
வீரர் முப்பத்திரண்டு கோடி விளைவித்த	...	23
வேத வானில் விளங்கி "அறஞ் செய்மின்"	...	69

குறிப்புரை

இந்நூல் சம்பந்தமான பாடல்களுக்கென அவ்வப் பொழுது ஸ்ரீ பாரதியாரே எழுதிய ஸமர்ப்பணங்களும்— முகவுரைகளும் பின்வருமாறு.

[1]

"ஸ்வதேச கீதங்கள்" என்னும் நூல் 1908-ல் முதன் முதல்வெளியாயிற்று. இது பின்வரும் ஸமர்ப்பணத்தோடும் முகவுரையோடும் கூடியது.

ஸமர்ப்பணம்

ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி ஆத்ம நிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரத தேவியின் ஸம்பூர்ண ரூபத்தைக் காட்டி, ஸ்வதேசபக்தி யுபதேசம் புரிந்தருளிய குருவின் சரணமலர்களில் இச்சிறு நூலை ஸமர்ப்பிக்கின்றேன். —ஆசிரியன்

முகவுரை

ஒருமையும் யௌவனத்தன்மையும் பெற்று விளங்கும் பாரத தேவியின் சரணங்களிலே யான் பின்வரும் மலர்கள் கொண்டு சூட்டத் துணிந்தது எனக்குப் பிழை யென்று தோன்றவில்லை. யான் சூட்டியிருக்கும் மலர்கள் மண மற்றனவென்பதை நன்கறிவேன். தேவலோகத்துக்குப் பாரி ஜாத மலர்கள் சூடத் தகுதிகொண்ட திருவடிகளுக்கு எனது மணமற்ற முருக்கம்பூக்கள் அணிக்குறைவை விளைக்குமென்பதையும் நான் தெரிந்துள்ளேன். ஆயினும் உள்ளன்பு மிகுதியால் இச்செய்கையிலே துணிவுகொண்டு விட்டேன். சாக்கியன் எறிந்த கற்களையும் சிவபிரான்

மலர்களாகக் கருதி அங்கீகரிக்க வில்லையா? அதனை யொப்ப, எனது குணமற்ற பூக்களையும் பாரதமாதா, கருணையுடன் ஏற்றருளுக!

ஸி. சுப்பிரமணிய பாரதி.

குறிப்பு:—இந்தப் பாடல்களை பிரசுரிக்குமாறு என்னைத் தூண்டி, இவை வெளிப்படுவதில் மிகுந்த ஆவல் காட்டி உதவிகளியற்றிய மித்திரர்களிடம் மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

[2]

1909–ல் 'ஜன்மபூமி' (ஸ்வதேச கீதங்கள்—இரண்டாம் பாகம்) வெளியிடப்பட்டது. அதிலுள்ள ஸமர்ப்பணமும் முகவுரையும் வருமாறு.

ஸமர்ப்பணம்

எனக்கு ஒரு கடிகையிலே, மாதாவினது மெய்த் தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும், சொல்லாமலுணர்த்திய குருமணியும், பகவான் விவேகானந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை ஸமர்ப்பிக்கின்றேன்.

ஸி. சுப்பிரமணிய பாரதி

முகவுரை

இனிய நிலவின் ஒளியால் விழுங்கப்பட்டு உலகம் அவாங் மனகோசரமாகிய ஸௌந்தர்யத்தைப் பெற்றிருக்கும் சமயத்தில், ஒவ்வொரு கவிஞனுடைய உள்ளமும் தன்னையறியாது குதூஹலமடைகின்றது. சூரியன் உதித்தவுடனே சேதனப் பிரகிருதி மட்டுமேயன்றி அசே

தனப் பிரகிருதியும், புதிய ஜீவனையும் உற்சாகத்தையும் பெற்றுத் திகழ்கின்றது. இவற்றினை யொப்பவே நாட்டில் ஓர் புதிய ஆதர்சம்—ஓர் கிளர்ச்சி—ஓர் தர்மம்—ஓர் மார்க்கம்—தோன்றுமேயானால், மேன்மக்களின் நெஞ்சமனைத்தும், இரவியை நோக்கித் திரும்பும் சூரியகாந்த மலர்போல், அவ் வாதர்சத்தை நோக்கித் திரும்புகின்றன. சென்ற சுபகிருது வருஷத்திலே பாரதநாட்டில், சர்வ சுபங்களுக்கும் மூலாதாரமாகிய "தேசபக்தி" என்ற நவீன மார்க்கம் தோன்றியது. நல்லோர்களின் சிந்தையெல்லாம் உடனே புளகிதமாயின. நல்லோருடைய குணங்களிலே குறைவுடையவனாகிய யானும் தேவியினது கிருபையால் அப் புதிய சுடரினிடத்து அன்பு பூண்டேன். அவ்வன்பு காரணமாகச் சென்ற வருஷம் சில கவிதைமலர் புனைந்து மாதாவின் திருவடிக்குப் புனைந்தேன்.

நான் எதிர்பார்த்திராத வண்ணமாக மெய்த்தொண்டர்கள் பலர் "இம்மலர்கள் மிக நல்லன" என்று பாராட்டி மகிழ்ச்சி யறிவித்தார்கள். மாதவும் அதனை அங்கீகாரம் செய்து கொண்டாள். இதனால் துணிவு மிகுதியுறப் பெற்றேனாகி, மறுபடியும் தாயின் பதமலர்க்குச் சில புதியமலர்கள் கொணர்ந்திருக்கின்றேன். இவை மாதாவின் திருவுள்ளத்திற்கு மகிழ்ச்சி யளிக்குமென்றே நினைக்கின்றேன்; "குழலினிது யாழினி தென்ப தம் மக்கள் மழலைச்சொற் கேளாதவர்" என்பது வேத மாதலின்.

இங்ஙனம்

ஸி. சுப்பிரமணிய பாரதி